# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**மே 2003 ஜீவியம் 9 மலர் 1**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| *யோக வாழ்க்கை விளக்கம் IV* | 2 |
| *இம்மாதச் செய்தி* | 13 |
| *லைப் டிவைன்* | 14 |
| *அன்பரும் நண்பரும்* | 24 |
| *அன்பர் கடிதம்* | 35 |
| *சத்திய ஜீவன்* | 37 |
| *அஜெண்டா* | 48 |
| *பிரார்த்தனை பலிக்க வேண்டும்* | 50 |
| *யார் சாதகர்* | 61 |


✮ ✮ ✮

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**761) இது ஒரு முயற்சி, முடிவில் சிருஷ்டியின் ஆனந்தமாகும். இடையில் ஆனந்தம் ஏற்படும்.**

*ஆனந்தத்தில் முடியும் முயற்சி.*

மனிதனுக்குப் பெரிய அதிர்ஷ்டம் வந்துவிட்டால், பெரிய பதவி கிடைத்துவிட்டால், இலட்சியமான அன்பு கிடைத்துவிட்டது என்று நினைத்துவிட்டால், மனம் வாழ்வின் அன்றாட வழக்கங்களை விட்டுப் புதியதை மனம் மீண்டும் மீண்டும் நினைக்கும். உடன் உள்ளவர்கள், "அவர் மனதில் இப்பொழுதெல்லாம் நாம் இல்லை. வாழ்வு வந்துவிட்டது. மனம் அதிலேயே இருக்கிறது'' என்று நினைப்பார்கள். அதற்கடுத்த கட்டத்தில் மனம் அதையும் நினைக்கும் நிலையிலில்லை என்றிருக்கும். தன்னை மறந்து, பரவசப்பட்ட நிலையில் செயலிழந்து, காற்றில் மிதப்பார்கள். வாழ்வில் பலருக்குக் கிடைக்கும் ஆனந்த அனுபவம் இது. அன்னையின் ஸ்பரிசத்தை முதலில் ஆன்மாவில் கண்டவர்கள் இதுபோன்று உணர்வதுண்டு. சிலருக்கு சிறு அளவில் பிறகு நீடிக்கும். பலருக்கு நினைவாக நீடிக்கும்.

மனத்தை வாழ்வின் செயல்களிலிருந்து வலிய விலக்கி அன்னையை நாடினால், எண்ணம் நம் முயற்சியை மீறி ஆட்கொள்வது தெரியும். அதை மீறி அன்னையை நாடினால், முயற்சியே முதலில் ஓரளவு ஆனந்தமாக இருக்கும். நாம் விலக்கும் எண்ண அலைகள் விலகாதவரை முயற்சி சிரமமாக இருக்கும்.



விலகினால் இதமாக இருக்கும். விலக்கும்பொழுது அவை கட்டுப்பட்டு விலகினால், இன்பமாக அன்னை நினைவு உள்ளிருந்து எழுவதைக் காணலாம். அதைச் சில நிமிஷங்களுக்கு மேல் தொடர்வது சிரமம். தொடர்ந்தால் முயற்சி இன்ப நிலைக்கு அழைத்துச் செல்லும். நெடுநாளில் இம்முயற்சி நிச்சயப் பலனை அளித்து நெடுநேரம் நீடிக்கும் நிலை ஏற்பட்டால், நினைவிலிருந்து அன்னைக்கு நாம் செல்ல முயலலாம்.

நினைவிலும் பல நிலைகள் உண்டு. நாமே முயன்று சொல்லால் நினைவுபடுத்துவது, சொல் தானே எழுவது, சொல் பின்னணிக்குப் போய் நினைவு எழுவது, நினைவு உணர்வாக மாறுவது, உணர்வு உருவமாகவே மாறுவது, அவற்றை எல்லாம் நாம் அழைப்பது, அவை தாமே எழுவது எனப் பல்வேறு நிலைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டமாக முன்னேறுதல், தவமுயற்சி; இது முழு யோகமாகும்.

நினைவுக்கு அடுத்தது உணர்வு. அதற்கடுத்தது செயல். ஒவ்வொன்றிலும் அத்தனை கட்டங்கள் உள்ளன. நினைவையும், உணர்வையும், செயலையும் கடந்தபொழுது, அன்னை நிதர்சனமாக உள்ளே எழுவார். அது ஒளிமயமாக இருக்கும். அறிவுக்குரிய ஒளி பிரகாசமாகவும், ஆன்மாவுக்குரிய ஒளி ஜோதியாகவும் இருக்கும். வெண்ணிற ஒளி அன்னைக்குரியது. சிவந்த நிறம் உடலைக் குறிப்பது. வயலெட் உணர்வையும், மஞ்சள் மனத்தையும் காட்டும். வைர ஒளி அன்னைக்கேயுரிய தனிச் சிறப்பான ஒளி. நீலம் கிருஷ்ணனுக்கும், வெண்மை கலந்த நீலம் ஸ்ரீ அரவிந்தருக்கும் உரியன. பொன்னிறம் கடைசியொளி. அது சத்தியஜீவிய ஒளி. நம் மனநிலைக்கும், ஆர்வநிலைக்கும், சூழலுக்கும், முயற்சியின் தரத்திற்கும் ஏற்ப அன்னையுருவம் வெவ்வேறு உருவம் தாங்கி உள்ளே எழும். அன்னையை நாடினால், அவர் நம்மை நாடுவார். அரை க்ஷணமும்

நாடுவார், அகலாமலுமிருப்பார். இம்முயற்சி முடிவில் ஆனந்தப் பெருக்கை அளிக்கும்.

அன்னையை அகத்தில் தேடுவது ஒரு முயற்சி. முடிவில் சிருஷ்டியே ஆனந்தமாகும். மனிதன் புறத்தில் வாழ்கிறான், புறத்தால் வாழ்கிறான். அதில் வெற்றி, தோல்வியுண்டு. ஒன்று மற்றதாக மாறும் நிலையும் உண்டு. அகம் துறவிக்குரியது. துறவறத்தில், வாழ்வின் வெற்றியோ தோல்வியோ எழுவதில்லை. சுத்த பிரம்மமும் உள்ளே இருப்பதால், அகவாழ்வில் அதைக் காணமுடியும். அதனுள் சென்று வாழ முடியும்.

ஸ்ரீ அரவிந்தர் கூறுவதும் பிரம்மம். அது பிரகிருதியுள் உள்ள பிரம்மம். அதுவும் அகத்தில் உண்டு.

- **மனிதனுக்குரியது புறம், அகமில்லை.**
- **புறத்தில் வெற்றியும், தோல்வியும் மாறி மாறி வரும்.**
- **அகம் துறவிக்குரியது.**
- **ஆழ்ந்த சமாதியைத் தரும் பிரம்ம நிஷ்டைக்குரியது அகம்.**
- **மனிதனுக்குரிய அகம், சந்தோஷம், கவலையாகும்.**
- **மனிதனுக்கு அகத்துள் ஆன்மீகத்தை மரபு தரவில்லை.**
- **ஸ்ரீ அரவிந்தர் அகத்தை மனிதனுக்குத் தருகிறார்.**
- **துறவியின் அகத்தை, பூரணப்படுத்தி மனிதனுக்கு ஸ்ரீ அரவிந்தம் தருகிறது.**
- **வாழ்விலுள்ள பிரம்மம் - Being of the Becoming - அகத்திலும் உள்ளது. அதுவே ஸ்ரீ அரவிந்தத்திற்குரியது, இல்லறத்திற்குத் துறவறத்தின் தூய்மையைத் தருவது. தூய்மையுடன் வலிமையையும் தருவது.**

☆ ☆ ☆



**762) இன்று நாம் பிரகிருதியால் சூழப்பட்ட அகந்தை. அகந்தை கரைந்தபின் நாம் பரிணாம வளர்ச்சிக்குரிய சைத்தியப்புருஷனாவோம். பிரபஞ்சத்தில் ஆன்மாவின் பரிணாம வளர்ச்சிக்குரிய மையம் சைத்தியப்புருஷன். அதனால் பிரகிருதியிலுள்ள அன்னை, நம் சைத்தியப்புருஷனை நோக்கி வருவார்கள். மனமும், ஜீவனும் தன்னிறைவால் நிரம்புவது அன்னை நம்மை நோக்கி வருவதன் அறிகுறி.**

***அன்னையின் வருகை.***

அறியாமை, இருள், மேல்மனம், கண்டம் (finite), அகந்தை, காலம், இடம், துன்பம், மரணம், பிரகிருதி (இயற்கை), கொடுமை, அழிவு, 'நான்' போன்றவை மனித வாழ்வின் அம்சங்கள். அன்னை இவற்றை விட்டு விலகிப் போவார்.

அறிவு, ஜோதி, உள்மனம், அகண்டம் (infinity), ஆத்மா, காலம் கடந்த நிலை, இன்பம், அமரவாழ்வு, புருஷன், கருணை, படைப்பு, தன்னலமற்ற நிலை ஆகியவை தெய்வத்திற்குரியவை. அன்னை இவற்றை நோக்கி வருவார்.

இவற்றுள் அகந்தை மாறி சைத்தியப்புருஷனாவதைப் பற்றியது மேற்சொன்ன கருத்து.

பிரம்மம் ஆதி.

சச்சிதானந்தம் உச்சகட்ட உயர்வு.

சிருஷ்டி (cosmos) மேலுலகம்.

சத்தியஜீவியம், சிருஷ்டி மையம்.

தெய்வலோகம், பிரபஞ்சம் பூவுலகத்தைத் தன்னுட்கொண்டது பூலோகம்.

பூலோகம் மனிதன் வாழ்வது. பிரபஞ்சத்தில் ஆத்மாக்கள் ஏற்பட்டு பூவுலகத்திற்கு வந்து வாசம் செய்கின்றன. தெய்வலோகம் பிரபஞ்சத்திற்குட்பட்டது. சத்தியஜீவியமும், சிருஷ்டியும் சச்சிதானந்தத்திற்கு அடுத்து கீழுள்ள உலகங்கள். ஈஸ்வர-சக்தி செயல்படும் உலகம் அது. சச்சிதானந்தம் பரப்பிரம்மமாகும். அத்தனை நிலைகளையும் கடந்தது ஆதி.

பிரபஞ்சம் தான் பரந்து விரிந்திருப்பதால் தன் இலட்சியம் இப்பரந்த பரப்பில் பூர்த்தியாகாது என்பதால், செறிந்த புள்ளிகளை தன்னுள் உற்பத்தி செய்தது. அவை ஜீவாத்மாக்கள். ஜீவாத்மா, பிரகிருதியில் செயல்படுவது உலகம். இதற்குப் பரிணாம வளர்ச்சியில்லை. நாம் என்று நாமறிவது அகந்தை. அகந்தை பிரகிருதியில் உற்பத்தியானது. அது ஜீவாத்மாவைச் சூழ்ந்துள்ளது. அதனால் ஜீவாத்மா பிரகிருதியின் இலட்சியத்தைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை. அகந்தை கரைந்தால் ஜீவாத்மாவுக்கு விடுதலையுண்டு. விடுதலையடைந்த ஜீவாத்மா சைத்தியப்புருஷனாவான். அவன் பிரபஞ்சம் முழுவதும் பரவுவான். சைத்தியப்புருஷன் பிரபஞ்சத்தின் இலக்கை எட்டக் கூடியது. இயல்பாக இறைவனையும், அன்னையையும் நாடக் கூடியது சைத்தியப்புருஷன். அன்னை சைத்தியப்புருஷனை அனுதினமும் நாடுவார். அகந்தை அழிந்து சைத்தியப்புருஷன் வெளிப்பட்டால், மனமும் ஜீவனும் நிறையும். அது அன்னையை நம்மை நோக்கி அழைக்கும்.

☆ ☆ ☆

**763) சாட்சிப்புருஷனான மனோமயப்புருஷன் சாட்சி நிலையை விட்டு ஈஸ்வரனாக மாற ஆரம்பித்து, பிரபஞ்சமெங்கும் பரவி, தன்னை பிரபஞ்சத்தின் ஆத்மாவாக்குவது முடிவான கட்டம்.**

*ஈஸ்வரனாக மாறும் சாட்சி.*



புருஷனும், பிரகிருதியும் லோகம். நாம் பிரகிருதியாக இருக்கிறோம். அதை மட்டும் அறிவோம். பிரகிருதி எதைச் செய்தாலும், புருஷன் பார்த்துக் கொண்டிருப்பான். அதனால் புருஷனை சாட்சி என்கிறோம். சாட்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தாலும், பிரகிருதி செயல்பட தேவையான சக்தியை அளிப்பது புருஷனேயாகும். சாட்சிப்புருஷனுக்கு மனோமயப்புருஷன் எனப் பெயர். இதற்கு அடுத்த கட்டம் விஞ்ஞானமயப்புருஷன் என உபநிஷதம் கூறுகிறது. அவனை பகவான் சத்தியஜீவன் என்கிறார். வேதம் சத்தியஜீவனையும், (அவன் வாழும் லோகத்தையும் - சத்தியஜீவியம், Supermind) Truth-conscious soul சத்தியத்தை அறியும் ஜீவன் என்கிறது. சத்தியம், ரிதம், பிருகட் என்பது வேதத்தின் விளக்கம். சத்தியஜீவனில் அகந்தையில்லை, அறியாமையில்லை. அறியாமைக்குரிய மேல்மனத்தில் சத்தியஜீவனில்லை. அது அனந்தனுடையது (infinity). எனவே சத்தியஜீவன் சத்தியத்தை அறிவான். புருஷன் என நாம் கூறுவது மனோமயப்புருஷன். இவன் மனத்திற்குரியவன், ஜீவாத்மாவின் பகுதி. இவனும் அறியாமைக்குரிய மேல் மனத்திலில்லை. அடிமனம் (subliminal), உள் மனம் (inner mind), ஆழ்ந்த ஜீவன் (inner being) எனப்படுவது நாம் அறியாதது. நாம் வசிப்பது மேல்மனம். இதைக் கடந்து உள்ளே போனால் அடிமனம். அது ஆழ்ந்த ஜீவனின் பகுதியாக, உள் மனத்துள் உறைகிறது. ஆணவ மலம் எனும் அகந்தை மனோமயப்புருஷனைச் சூழ்ந்துள்ளது. இவனுக்குச் சத்தியம் தெரியாது. அறியாமையாலும், அகந்தையாலும் சூழப்பட்டதால் மனோமயப்புருஷனுக்குச் சத்தியம் தெரிவதில்லை. எனவே இவன் ஆத்மா (soul) என்றாலும் தன்னையறியாத (unconscious) ஆத்மாவாகும். அகந்தை கரைந்தால், அறியாமையின் பிடி தளரும். பிடி தளர்ந்து, அகந்தையிலிருந்து விடுபட்டால், மனோமயப்புருஷனுக்கு விடுதலை கிடைக்கிறது. விடுதலை பெற்றபின் சலனமற்ற மனோமயப்புருஷனுக்கு சலனம் ஏற்படுகிறது. அதனால் பரிணாம வளர்ச்சி ஆரம்பிக்கிறது.

அதன் மூலம் மனோமயப்புருஷன், சைத்தியப்புருஷனாகிறான். மனோமயப்புருஷன் சாட்சி நிலையை விட்டு அதிகாரம் பெற்று பிரகிருதியை ஆளும் பொழுது ஈஸ்வரனாகிறான். புருஷப்-பிரகிருதி மாறி ஈஸ்வர-சக்தியாகிறது. அதாவது பிரகிருதி சக்தியாகிறது. அந்நிலை முடிவான நிலையானால் அதன் ஆரம்பம் சைத்தியப்புருஷன் வெளிவருதலாகும்.

வெளிவந்த சைத்தியப்புருஷன் தான் பிரபஞ்சத்தின் ஆத்மாவுக்குரியவன், பரமாத்மாவின் பகுதி என்றறிவதால், வளர்ச்சியை நாடுகிறான். ஆன்மாவுக்கு அழிவில்லை, சலனமில்லை, அசைவில்லை, பிறப்பில்லை, இறப்பில்லை என்பது நம் மரபு. பகவான் ஆன்மாவுக்கு வளர்ச்சியுண்டு. அது வெறும் வளர்ச்சியில்லை, பரிணாம வளர்ச்சி என்கிறார். இது பகவான் யோகத்தில் செய்த புரட்சி.

வளரும் சைத்தியப்புருஷன் முதல் நிலையில் பிரபஞ்சத்தின் ஆத்மாவாகிறான். முடிவான நிலையில் பரமாத்மாவுடன் ஐக்கியமாகிறான். இதை spiritual evolution ஆன்மீகப் பரிணாமம் என்கிறார் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.

மனம் மனிதனின் தலையாய கருவி. அங்குள்ள புருஷன் மனோமயப்புருஷன். இவன் சாட்சியாக இருக்கிறான். ஞான யோகத்தில் மோட்சம் பெற்றுத் தருபவன் சாட்சிப்புருஷன். மனம் எப்படிச் செயல்படுகிறது என ஸ்ரீ அரவிந்தர் விளக்குகிறார். சாட்சிப்புருஷனின் நிலை என்ன என்பதையும் விளக்குகிறார்.

ஒரு நிகழ்ச்சியை மனதில் விளக்கும்பொழுது, அகந்தைக்கும் சாட்சிக்கும் உள்ள இடம் தெளிவுபடுகிறது. கோபம், பசி, எண்ணம், ஆசை என்பன மனத்தில் உதிப்பது முதற்காரியம். பகவான் கோபத்தை உதாரணமாக எடுத்துக் கொள்கிறார். கோபம் எழுகிறது. நாமே கோபமாகிறோம். கோபம் என்ற உணர்வோடு ஒன்றிவிடுகிறோம்.



மனித வளர்ச்சியில் முதல் நிலை இது. கோபம் தணியும்வரை நாம் கோபமாக இருக்கிறோம். மனம் வளரும்பொழுது மனிதன், கோபத்தினின்று அகன்று சிந்திக்கிறான். சிந்தனை மனத்தின் செயல். சிந்தனை மனிதனை கோபத்திலிருந்து பிரிக்கிறது. பிரிந்து நின்று சிந்திப்பது வளர்ச்சியின் முதல் நிலை. கோபத்திலிருந்து அதிகமாக விலகினால் தான் யாரென்று உணரும் அறிவு எழும். முழுவதும் விலகி நின்று பார்த்தால், “எனக்குக் கோபம் வந்தது” என்று தெரியும். ‘நான்’ வேறு, கோபம் வேறு எனப் பிரிந்த நிலையில் ‘நான்’ என்பது அகந்தை என விளங்கும். கோபத்தினின்று விலகியதுபோல், அகந்தையிலிருந்து விலகினால் நான் என்ற அகந்தை, நான் எனும் சாட்சிப்புருஷனாகக் காட்சியளிக்கும்.

**இதுவே மனோமயப்புருஷன் எனும் சாட்சி.**

மேற்சொன்னதை சாதிப்பது தியானம். தியானம் அமைதியைக் கொடுத்து சிந்திக்கச் செய்து, அகந்தையை அறிவுறுத்தி, சாட்சியில் முடிகிறது. நிஷ்டையைத் தொடர்ந்தால் சாட்சிப்புருஷன் க்ஷரப்பிரம்மத்தை அறிவான். மோட்சம் பெறுவான்.

பூரணயோகம் கையாள்வது தியானமில்லை, சமர்ப்பணம். சமர்ப்பணம் கோபம் எழுந்தவுடன் அதைச் சரணம் செய்ய முயல்வதால், அகந்தை தானே விலகுகிறது. சமர்ப்பணம் எழுந்த பின் அகந்தைக்கு வேலையில்லை. கோபம் சமர்ப்பணமானால் கோபப்பட்ட அகந்தை கரைகிறது. அகந்தை கரைந்த பின் வெளிப்படும் ஆத்மா சாட்சிப்புருஷனில்லை, சைத்தியப்புருஷனாகும்.

இதுவே பூரண யோகத்தில் முதற்படி.

* மனிதனில் உள்ளது ஆத்மா.
* அது ஜீவாத்மாவாகவும், அதன் பகுதிகளான 3 புருஷன்களாகவும் உள்ளன.

* ஜீவாத்மாவின் பிரதிநிதியான சைத்தியப்புருஷன் என்பதும் ஆத்மா.

உடலிலிருந்து, வாழ்வு, மனம், சத்தியஜீவியம் ஆகிய எல்லா இடங்களிலும் ஆத்மாவுண்டு. அவற்றைப் புருஷன் என்கிறோம். அதன் பிரகிருதியை சைத்தியப்புருஷன் என்கிறோம்.

| கரணம் | | ஆத்மா | | சைத்தியப்புருஷன் |
|---|---|---|---|---|
| உடல் | - | அன்னமயப்புருஷன் | - | உடலுக்குரிய சைத்தியப்புருஷன் |
| உயிர் | - | பிராணமயப்புருஷன் | - | பிராணனுக்குரிய சைத்தியப்புருஷன் |
| மனம் | - | மனோமயப்புருஷன் | - | மனத்திற்குரிய சைத்தியப்புருஷன் |

மனத்திற்கும் சத்தியஜீவியத்திற்கும் இடைப்பட்ட நிலைகள் 4. சைத்தியப்புருஷன் வளரும்பொழுது இந்நிலைகட்கு உயர்கிறான். சத்தியஜீவியத்தை சைத்தியப்புருஷன் அடையும்பொழுது ஈஸ்வரனாகிறான். இது பூரணயோகப் பாதையாகும்.

☆ ☆ ☆

**764) மனம் அனந்தனை நினைக்கின்றது. உணர்வு அனந்தனை சக்தியாக உணர்ந்தாலும், உடல் அனந்தனை உலகெங்கும் வியாபிக்கும் பொருளாக (substance) அறிந்தாலும், பரம்பொருளைச் சிருஷ்டியாகவும், சிருஷ்டியைப் பரம் பொருளாகவும் அறிய உதவும்.**

*பரம்பொருளே சிருஷ்டி.*

பரம்பொருள் தன்னையே உலகமாக சிருஷ்டித்தான், உலகைத் தன்னிலிருந்து சிருஷ்டித்தான் என்ற ஆன்மீக உண்மையை சர்வம் பிரம்மம் என்றது உபநிஷதம். இதன் முடிவு,



மனம் என்பது பரம்பொருள்.

உணர்வு என்பது பரம்பொருள்.

உடலும் பரம்பொருளே,

என நாம் ஆன்மீக அனுபவமாகப் பெறுவது பூரணயோகப் பாதையில் உள்ள மைல் கற்கள். மனம் அகந்தையை இழந்தால் பிரபஞ்சத்தின் மனமாகும். அனைவருடைய மனத்துடனும் கலக்கும். உணர்வின் அகந்தை கரைந்தால், நம் உணர்வு, உலகத்து மனிதர்களுடைய உணர்வோடு ஒன்றும். உடலும் அதேபோல் ஐக்கியமாகும். அன்னை தம் சூட்சும உடல் பிரபஞ்சமெங்கும் பரவியதைக் கண்டார்கள்.

☆ ☆ ☆

**765. அக்ஷயப் பாத்திரத்தில் அனந்தன் ஜடமாக வெளிப்படுகிறான். எதிரியின் பலத்தில் பாதி தனக்கு வேண்டும் என்று கேட்டவனுக்குக் கொடுக்கும் வரம், உணர்வில் அனந்தமாகும்.**

*எல்லையற்ற பலம்.*

வாலி வரம் பெற்றவன். எதிரியின் பலத்தில் தனக்குப் பாதி வேண்டும் என்ற வரம் பெற்றவன். அவனை யார் தோற்கடிக்க முடியும்? அக்ஷயப் பாத்திரம் எடுக்க எடுக்க குறையாது. காமதேனு கேட்டனவெல்லாம் தரும். அன்னை வாழ்வை அக்ஷயப் பாத்திரமாகவும், காமதேனுவாகவும் மாற்றி அமைக்கிறார். நாம் எதைச் செய்தாலும் இன்று அக்காரியம் முடிவது நம் திறமை, அந்தஸ்தைப் பொருத்தது. நாம் அகந்தையிலிருந்து விலகி அன்னை மையத்திற்குப் போனால், வாழ்வு வாலிக்குத் தந்த வரத்தைத் தரும். எதிரியின் பலத்தில் பாதி வாலிக்கு வந்தது. வாழ்வின் முழுப் பலமும் நமக்கு வருகிறது. எப்படி? நாம் என்ன செய்யவேண்டும்?

* இன்று நாம் நம் பெற்றோர் பெற்ற பிள்ளைகளாக இருக்கிறோம்.
* நம் வலிமை நம் அந்தஸ்தைப் பொருத்தது.
* அன்னை மையத்திற்குப் போனால் நாம் அன்னையின் குழந்தைகளாவோம்.
* அன்னைக் குழந்தையின் வலிமை, அன்னையின் வலிமை.
* *எந்தக் காரியத்திற்குப் போனாலும், காரியம் நம்மை ஏற்று, நம் காரியத்தைத் தம் காரியமாக முடிக்க முயல்கிறது.*

*தொடரும்...*

☆ ☆ ☆

**ஜீவிய மணி**

ஆசைக்கு மனிதன் ஆன்மா எனப் பெயரிட்டுள்ளான்.



# இம்மாதச் செய்தி

**கேட்டுப் பெறுவதில்லை காதல் எனும் அன்பு.**

**மனித இதயத்தில் எழுவதில்லை காதல். மனித இதயக் குகையிலுள்ள தெய்வம் உணர்வது காதல்.**

**உலக வாழ்வின் முடிவான இலட்சியம் இலட்சியக் காதல்.**

*******

The heart that longs for love can only long and yearn but cannot ask for it, as what is got by asking cannot be LOVE.

"ஸ்ரீ அரவிந்தம்''

**லைப் டிவைன்**

கர்மயோகி

## XI. Delight of Existence : The Problem

**How shall we solve it?** Page No. 98

**We can say Sachchidananda is not the beginning.** Para No. 15

**It is not the end.**

**But the beginning and end is a Nihil.**

**The Nihil is an impartial void.**

**It is a nothing that contains all.**

**It contains all potentialities.**

**Those are the potentialities of existence and non-existence.**

**Consciousness and non-consciousness too have potentialities.**

**It includes the potentialities of delight and undelight.**

**We are free to accept this as an answer.**

**We tried to explain everything.**

**We ended by putting everything together.**

**Actually, we have explained nothing.**

**This Nihil is a nothing full of potentialities.**

**It is the greatest paradox.**

**It is an opposition of terms and possibilities.**

**We started to explain a minor contradiction.**

**We now face a major contradiction.**

**Thus, self-contradiction rises to the maximum.**



## 11. ஆனந்தம் - கேள்வி

**இதை எப்படித் தீர்ப்பது?**

**சச்சிதானந்தம் மூலமில்லை என்று கூறலாமா?**

**அதுவே முடிவில்லை எனலாமா?**

**ஆரம்பமும், முடிவும் சூன்யம் என்பது உண்மையா?**

**சூன்யம் எந்தக் கட்சியிலும் சேராது.**

**உலகை உட்கொண்டது சூன்யம்.**

**சூன்யத்துள் எல்லாம் இருக்கின்றன.**

**சத்தும், அசத்தும் அதனுள் உள்ளவை.**

**ஜீவியமும், அதன் எதிரும் சூன்யத்திற்குரியவை.**

**ஆனந்தமும், அதன் எதிரும் அங்குண்டு.**

**இதையே முடிவாக நாம் ஏற்கலாம்.**

**எல்லாவற்றையும் விளக்க நாம் ஆரம்பித்தோம்.**

**எல்லாவற்றையும் இப்பொழுது சேர்த்துவிட்டோம்.**

**நாம் எதையுமே விளக்கவில்லை.**

**சூன்யம் அனைத்தையும் உட்கொண்டது.**

**இது பெரிய புதிர்.**

**இது சொல்லிலும், செயலிலும் உள்ள முரண்பாடு.**

**ஒரு சிறு முரண்பாட்டை விளக்க முற்பட்டோம்.**

**ஒரு பெரிய முரண்பாட்டை எதிர்கொண்டுள்ளோம்.**

**முரண்பாட்டை நாம் பெரியதாக்கிவிட்டோம்.**

**Nihil is a void.**
**A Nihil can have no potentialities.**
**We say it is impartial.**
**We say too, it is indeterminate.**
**Then it must be a chaos.**
**Now we started with a void.**
**We made it into a chaos.**
**We are unable to explain how the chaos came there.**
**Sachchidananda is our original conception.**
**Let us return to it.**
**It is our foundation.**
**We need a complete solution.**
**Is it possible?**

**There is something we need to know first.** Page Nos. 98&99
**The universal consciousness is different from our mental consciousness.** Para No. 16
**It is more essential and wider than our waking consciousness.**
**Our consciousness is human consciousness.**
**Our delight is emotional, sensational pleasure.**
**The universal delight is something different.**
**Human pleasure is that of the individual creature.**
**The universal delight is wider.**
**Man uses pleasure, joy and delight in a limited sense.**
**They are occasional movements.**
**They depend upon habitual causes.**
**They emerge exactly as their opposites.**



**சூன்யம் ஒன்றுமில்லாதது.**
**சூன்யத்துள் எதுவுமிருக்காது.**
**அது பாரபட்சமற்றதென்கிறோம்.**
**அது சிருஷ்டிக்க வல்லதன்று என்கிறோம்.**
**அப்படியானால் அது ஒரு குழப்பம், பிரளயம்.**
**நாம் சூன்யத்திலாரம்பித்தோம்.**
**அதைக் குழப்பத்தில் முடித்தோம்.**
**எப்படிக் குழப்பம் வந்தது எனப் புரியவில்லை.**
**நாம் சச்சிதானந்தத்தில் ஆரம்பித்தோம்.**
**மீண்டும் அங்குப் போவோம்.**
**அதுவே அஸ்திவாரம்.**
**நமக்குப் பூரண விளக்கம் தேவை.**
**அது முடியுமா?**

**நாம் முதலில் அறியவேண்டியது ஒன்றுண்டு.**
**பிரபஞ்ச ஜீவியம் நம் ஜீவியத்திலிருந்து மாறுபட்டது.**

**நம் விழிப்பிலுள்ளதைவிட அது முக்கியமானது, விரிவானது.**

**நம் ஜீவியம் மனித ஜீவியம்.**
**நாம் ஆனந்தம் என்பது நம் உணர்விலும், உடலிலும் உற்பத்தியாவது.**
**பிரபஞ்ச ஆனந்தம் மாறுபட்டது.**
**தனி மனிதன் அனுபவிப்பது மனிதனுடைய இன்பம்.**
**பிரபஞ்ச ஆனந்தம் பரந்து விரிந்தது.**
**சந்தோஷம், இன்பம், மகிழ்வு என்பவற்றிற்கு நம் அர்த்தம் குறுகியது.**
**இவை எப்பொழுதோ எழுபவை.**
**இவை நம் பழக்கத்திற்குரியவை.**
**இவற்றின் எதிரான துன்பம், வலி போலவே இவை எழுகின்றன.**

Pain and grief are the opposites of joy.
They too are limited and occasional movements.
They issue from a background other than themselves.
We speak of delight of being, not ego.
It is universal.
It is illimitable, self-existent.
They are not dependent on particular causes.
They issue out of the background of all backgrounds.
Pain and pleasure issue from there.
Neutral experiences too emerge from there.
Delight of being tries to become delight of becoming.
It is a movement of force.
It takes different forms of movement.
Pleasure and pain are those forms.
They are positive and negative movements.
This movement is subconscient in Matter.
It is superconscient beyond Mind.
This delight seeks to realise itself in Mind and Life.
Thus it emerges in the becoming.
It is an increasing self-consciousness of the movement.
Its first phenomena are dual and impure.
They move between the poles of pleasure and pain.
But it aims at a self-revelation.
It is a self-revelation in the purity of a supreme delight of being.
This delight is self-existent.
It is independent of objects and causes.
Sachchidananda moves.



வலியும், கவலையும் சந்தோஷத்திற்கு எதிரிகள்.
அவையும் சிறியவை. ஏதோ ஒரு சமயம் எழுபவை.
பின்னணியிலிருந்து எழுபவை.
நாம் கூறுவது ஜீவனின் ஆனந்தம், அகந்தையது அன்று.
இது பிரபஞ்ச ஆனந்தம்.
அளவு கடந்தது, சுயமானது.
எந்த ஒரு காரணத்தையும் பற்றியதில்லை.
பின்னணியின் பின்னணியிலிருந்து அவை எழுகின்றன.
வலியும், இன்பமும் இங்கே எழுகின்றன.
இரண்டுமில்லாதவையும் இங்கே உற்பத்தியாகின்றன.
ஜீவனின் இன்பம், இயற்கையின் இன்பமாகிறது.
அது சக்தியின் செயல்.
அதன் ரூபங்கள் பல.
வலியும், சந்தோஷமும் அவ்ரூபங்கள்.
அவற்றை வேண்டியவை, வேண்டாதவை என்கிறோம்.
ஜடத்தின் ஆழ்மனச் சலனங்கள் அவை.
மனத்தைக் கடந்த பரமாத்மாவின் அசைவுகள் அவை.
இந்த ஆனந்தம் வாழ்விலும், மனதிலும் சித்திக்கவேண்டும்.
இதுவே இயற்கையின் ஆனந்தம்.
சலனம் தன்னை அதிகமாக அறிவதன் பலனிது.
இதன் முதலுருவங்கள் இரட்டையாகவும், தூய்மையற்றுமிருக்கும்.
அவை இன்ப துன்பங்களாகும்.
தம்மை அவை வெளிப்படுத்தும்.
ஈஸ்வரனின் தூய ஆனந்தமாக அவை வெளிவர முயல்கின்றன.

இது சுய ஆனந்தம்.
காரண காரியமற்ற ஆனந்தமிது.
சச்சிதானந்தம் சலனமடைகிறது.

It moves towards a realisation.
It is a realisation of the universal existence in the individual.
It realises the form exceeding consciousness in the form.
It is the form of the body and mind.
Similarly, it moves towards the realisation of the universal.
It is a universal delight that is self-existent.
It is an objectless delight.
It is a delight in the flux of particular experiences.
It is a delight in objects.
We seek these objects.
To us they are stimulating causes of pleasure and satisfaction.
We are free, possessed of self.
We shall not seek.
We shall possess them as reflectors.
They are not the cause of eternal delight.

Page No. 99
Para No. 17

Man is egoistic.
The mental person emerges out of the dim shell of matter.
Delight of existence is neutral, semi-latent.
Man is still in the shadow of the subconscious.
He is a concealed soil of plenty.
He is covered by a desire.
It is a luxuriant growth of poisonous weeds.
The flowers of it too are poisonous.
Pain and pleasure are those flowers.



அது சித்தியை நாடுகிறது.
பிரபஞ்சம் மனிதனில் வெளிப்பட சச்சிதானந்தம் முயல்கிறது.
ரூபத்தைக் கடந்தது ரூபத்தில் வெளிப்படுவதே அது.
உடலும், மனமும் அதுவே.
அதேபோல் பிரபஞ்சத்திலும் சச்சிதானந்தம் வெளிப்படும்.
காரியமற்ற இன்பமது.
பிரபஞ்சத்திற்குரிய சுய ஆனந்தம்
ஓர் அனுபவ ஆனந்தம் அது.
அது பொருளில் வெளிப்படும் ஆனந்தம்.
நாம் இப்பொருளை நாடுகிறோம்.
இவை நம் இன்பதுன்பக் கருவிகள்.

நாம் சுதந்திரமானவர்கள். நம்மை நாம் ஆட்கொண்டவர்கள்.
நாம் தேடவேண்டியதில்லை.
இன்பத்தைப் பிரதிபலிப்பாகப் பெறுவோம்.
அவை பேரின்ப ஊற்றல்ல.

மனிதன் அகந்தை.
ஜடத்திலிருந்து மனிதன் பிறக்கிறான்.
ஆனந்தம் பொதுவானது, அரைகுறையாகத் தெரியும்.
மனிதன் ஆழ்மனத்தின் சாயலில் வாழ்கிறான்.
அபரிமிதம் அவனுள் மறைந்துள்ளது.
அவன் ஆசைக்குட்பட்டவன்.
ஆசை விஷ விருக்ஷம்.
அதன் புஷ்பங்களும் விஷமானவை.
வலியும், சந்தோஷமும் அம்மலர்கள்.

**They are the flowers of our egoistic existence.**
**The divine conscious force is working secretly in us.**
**It devours these growths of desires.**
**The Rig Veda calls them the fire of God.**
**It burns up the shoots of earth.**
**Something is concealed at these roots of desire.**
**It is the cause and secret being.**
**It is the sap of delight in them.**
**That will emerge in new forms.**
**It will not be of desire.**
**It will be self-existent satisfaction.**
**It will remove mortal pleasure.**
**Immortal ecstasy will emerge there.**
**This transformation is possible.**
**Man is the result of division and ignorance of self.**
**He is an ego.**
**Sensation and emotion seek that ecstasy.**
**They fail to reveal that ecstasy.**
**It is because of ego.**
**Pain and pleasure are delight in the being.**
**Therefore, it is possible to transform.**

*The End.*

☆ ☆ ☆



**அவை அகந்தையின் மலர்கள்**
**ஆத்மா இரகஸ்யமாக நம்முள் செயல்படுகிறது.**
**ஆசை மலர்களை அது விழுங்கும்.**
**ரிக் வேதம் அவற்றை அக்னி என்கிறது.**
**அது பூமியின் வளர்ச்சியை எரிக்கும்.**
**ஆசையின் அடியில் மறைந்துள்ளது ஒன்றுண்டு.**
**அதுவே இரகஸ்யம், காரணம்.**
**அதுவே சாரம்.**
**அவை புது ரூபத்தில் மலரும்.**
**அது ஆசையாக இருக்காது.**
**அது சுயமான திருப்தியாகும்.**
**மனித ஆசையை அது விலக்கும்.**
**அழியாத ஆனந்தப் பூரிப்பு அங்கு எழும்.**
**இத்திருவுருமாற்றம் நடக்கும்.**
**மனிதன் பிரிவினையாலும், அறியாமையாலும் பிறந்தவன்.**
**அவன் அகந்தை.**
**மனித உணர்வு பூரிப்பைத் தேடுகிறது.**
**உணர்வு பூரிப்பை வெளியிட முடியவில்லை.**
**அதற்கு அகந்தை காரணம்.**
**வலியும், இன்பமும் அடிப்படையில் ஆத்மாவின் பூரிப்பே.**
**அதனால் திருவுருமாற்றம் நடைபெறும்.**

*முற்றும்.*

☆ ☆ ☆

## அன்பரும் - நண்பரும்

அன்பர் - விசேஷம், சம்பிரதாயம் அன்னைக்கு ஒத்து வாராது என்பதில் என்ன தத்துவம் உள்ளது?

நண்பர் - உலகில் எவரும் சூது, குடி நல்லது என்று கூறமாட்டார்கள். பெண்களை நாடுவது தவறு என உலகம் ஏற்கும். மனிதன் திருமணம் செய்து பெண்ணுடன் வாழ்க்கை நடத்தும்பொழுது மற்ற பெண்களுடன் தொடர்புகொள்வதில் என்ன தவறு என்பது ஒரு கேள்வி. குடி மனத்திற்குப் போதை தருகிறது. போதை இன்பம் தருகிறது. இன்பம் இன்பமாக இருக்கிறதே, இதில் தவறு எப்படி வருகிறது என்று ஒரு கேள்வி எழுகிறது. பயிரிட்டாலும், முதலீடு செய்து தொழில் செய்தாலும், பலன் வந்தால்தான் உண்டு. சூது அதுபோல்தானே, அதில் தவறு என்ன என்ற கேள்விக்குப் பதில் தேவை.

அன்பர் - உலகம் மறுப்பதும், ஏற்பதும் சில இடங்களில் ஒன்றாக இருக்கிறது. கவிகளில் அநேகர் மது, கஞ்சா அருந்தியுள்ளனர். சோமபானம் உயர்ந்ததாக வேதம் கருதியது.

நண்பர் - இவற்றுள் பொதிந்துள்ள கருத்துகளின் உண்மைகளைப் பல தலைப்புகளில் கருதலாம்.

1) **என்ன செய்கிறோம் என்பதைவிட ஏன் செய்கிறோம் என்பது முக்கியம்.**
2) **ஊர் முன்னேற சில கட்டுப்பாடுகள் தேவை. அவற்றை ஏற்றால்தான் உலகம் முன்னேறும். திருமணம் அவற்றுள் ஒன்று.**



3) **தனி மனிதன் சமூகத்தின் தலைவன். சமூகம் அவனைப் பின்பற்றவேண்டும். மனிதன் சமூகத்தைப் பின்பற்றக்கூடாது.**
4) **யோகமும், வாழ்வும் பொய்யிலிருந்து, மெய்க்குப் போகின்றன. மெய்யை நாடுவது முன்னேற்றம். பொய்யை நாடினால் முன்னேற்றமில்லை. சூது பொய்யை நாடுகிறது.**
5) **உடலுக்கு ஆரோக்கியம் தேவை. மனத்திற்கு மெய் ஆரோக்கியம். குடி உடல்நலத்தைக் கெடுக்கும். சூது மனநலத்தைக் கெடுக்கும்.**
6) **சம்பிரதாயம் தோற்றம், தோற்றத்தை நம்புவது மூடநம்பிக்கை.**

அன்பர் - இவை எல்லாம் புரிகிறது. விளக்கினால் திருப்தியாக இருக்கும். Social consciousness என்பது அன்னைக்கு ஒத்து வாராது என்பதை மனதில் படும்படிச் சொன்னால் நல்லது. மனச்சாட்சி பொன் விலங்கு என்பதும் அதுபோன்றது.

அன்பர் - இவற்றிற்கு நீங்கள் விரும்புவதுபோல் விளக்கம் தர வீட்டில் நடக்கும் விஷயம் மூலம் கூறுவது விளங்கும். தத்துவமாகப் பேசினால் மனதில் படாது.

நண்பர் - Silent will மௌனமாக இருந்தால் எண்ணம் வலுவாக செயல்படும் என்ற விளக்கம் மனத்தைத் தொட்டது. அதுபோன்ற விளக்கம் எதிர்பார்க்கிறேன்.

நண்பர் - Social consciousness, psychological consciousness என்ற இரண்டும் அன்னை ஜீவியத்தைவிடக் குறைந்தவை என்பதால் அருள் செயல்படுவதைத் தடுக்கும்.

10 காணி நிலம் புன்செய். வீட்டில் அதை விற்றுவிட்டு நன்செய் நிலம் வாங்கப் பிரியப்பட்டால், மார்க்கட் விலை காணி ரூ.40,000. அதற்குக் குறையாமல் விற்க முனைகிறோம். இன்னும் 3 மாதத்தில் அந்த ஊருக்குத் தொழிற்பேட்டை வருகிறது. தொழிலுக்கு நிலம், காணி இலட்ச ரூபாய் என்று வாங்குவார் என்ற செய்தி எதிரி மூலம் வருகிறது. காவல்காரன் மூலம் வருகிறது என்றால், ''எதிரி மூலம் வரும் செய்தி எனக்கு வேண்டாம்'', "காவல்காரன் பேச்சால் இலாபம் பெறும் அளவுக்கு நான் மட்டமாகிவிட்டேனா?" என அந்தச் சந்தர்ப்பத்தை இன்றும் மறுப்பவர் உண்டு. நேரடியாக இந்த அனுபவம் பெற்றவராலேயே இதை எளிதாக நம்ப முடிவதில்லை. இங்குக் கருவான விஷயமென்ன? "விலை பெரிதன்று, நாலு பேர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதே எனக்கு முக்கியம்" என்ற மனப்பான்மை சமூகத்தை முக்கியமாகக் கருதுவது. இது ஆயிரம் ரூபங்களில் அன்றாடம் வருகிறது. நாம்,

- விஷயத்தைப் புறக்கணித்து, சமூகத்தின் அபிப்பிராயத்தைப் போற்றினால் நமக்குள்ளது social consciousness சமூக ஜீவியம்.
- வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தபொழுது விருந்து நடக்கிறது. வயிற்றுவலியால் நாம் விருந்தில் கலந்துகொள்ள முடியாதபொழுது, விருந்தினருடன் கலந்து சாப்பிட முடியவில்லை என நாம் கசங்குவது சமூகம் முக்கியம் என்றாகும்.

- **நாம் பிறர் நினைப்பதை முக்கியமாகக் கருதினால், நாம் கலந்துகொள்ளவில்லை என விருந்தினர் வருத்தப்படுவார்கள்.**



- **வயிறு வலிக்கிறது. சாப்பிடாமலிருப்பது அவசியம் என நாம் கருதினால், வந்த விருந்தினர் வயிற்றுவலிக்காக வருத்தப்படுவர்.**
- **நம் எண்ணத்தைப் பொருத்து, அவர்கள் மனம் வேலை செய்யும்.**
- **எது முக்கியம் என்பதைவிட நாம் எதை முக்கியமாகக் கருதுகிறோம் என்பது முக்கியம்.**
- **சமூகத்தைவிட எது சரி என்ற நம் அபிப்பிராயம் முக்கியம், அதைவிட அன்னைச் சட்டம் முக்கியம்.**
- **எது சரி என்பதைவிட பிறர் நம்மை சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பது நம்மை பலஹீனனாக்கும்.**
  - நாம் உண்மையாக இருக்கும்பொழுது, நம் உண்மையைப் பிறர் ஏற்பது அவசியம் என்றால், உண்மையைவிட பிறர் - சமூகம் - முக்கியமாகும்.
  - நான் சொல்வது உண்மை. ஏற்பது உன் பங்கு. நீ ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் உண்மை, உண்மையே என்பது உண்மை முக்கியம் - psychological consciousness - என்றாகும்.
  - சமர்ப்பணத்தில் அன்னை என் உண்மையை ஏற்றார். அதுவே எனக்கு முக்கியம். உண்மை என்பதைவிட அன்னை ஏற்றார் என்பது முக்கியம். யார் ஏற்கிறார், யார் ஏற்கவில்லை என்பது முக்கியமில்லை என்றால், உண்மை ஜெயிக்கும், அனைவரும் ஏற்பார். அது அன்னைக்குரிய வெற்றி. அதையும் நாம் அடக்கமாக உணர்ந்து, அடக்கமாகப் பேசுவது அன்னையைச் செயலில் நாம் ஏற்பதாகும்.
  - அன்னையை நாம் ஏற்றால், உலகம் நம்மை ஏற்கும். உலகை நாம் ஏற்றால், உலகம் நமக்கு

அந்தஸ்திருந்தால்தான் ஏற்கும், இல்லாவிட்டால் நாம் உலகை ஏற்பதால், உலகம் நம் உயிரை எடுக்கும்.

- நாம் நம் மனத்தின் உண்மையை உலகத்தைவிட முக்கியமாகக் கருதி ஏற்றால், உலகம் அதற்குப் பணியும். நம் மனத்தின் உண்மையை உலகம் ஏற்றால்தான் பயன்படும் என்றால், உலகம் நம்மை உயிரோடு சித்ரவதை செய்யும்.
- எவரும் சொந்த அனுபவத்தில் இந்த உண்மைகளைக் காணலாம். இவை விலக்கில்லாத விதிகள்.
- இதை அனைவருக்கும் புரியும் மொழியில் கூறுவதானால், "அன்பர் என்பவர் அனைவரையும் விட உயர்ந்தவர். அந்த உயர்வு புரிந்து மனிதன் பெருமைப்படாவிட்டால், உயர்வுக்கு வலிமை வரும்.

எதற்கு முக்கியமில்லை. எல்லாவற்றிற்கும் முக்கியம் உண்டு. படிப்பு, பதவி, பணம், உடல் வலிமை, ஜாதி, செல்வாக்கு, அந்தஸ்து, ஆகிய அனைத்திற்கும் முக்கியத்துவம் உண்டு. **அதேபோல் அன்னையை ஏற்றவர் என்பது முக்கியமாகும், மற்ற அனைத்தையும்விட அதிக முக்கியமாகும்**".

- **அந்த முக்கியத்துவத்தைக் கருதாவிட்டால், அதற்கு அதிகத் திறன் உண்டு.**

அன்பர் - நான் எந்த வேலையையும் perfect சிறப்பாகச் செய்வேன். அதனால் என்னால் அதிக வேலை செய்ய முடியவில்லை. அது பிறர் - முதலாளி - குறை சொல்ல இடம் தருகிறது.

நண்பர் - இது ஒரு புதிரான இடம். இதனுள் பல விஷயங்கள் உள்ளன.



1) சிறப்பாகச் செய்தால், அதிக வேலை செய்ய முடியாது.
2) **சிறப்பாகச் செய்பவர், அதிக வேலை செய்வார்.**
3) சிறப்பான வேலைக்கு அதிக நேரமாகும்.
4) சிறப்பான வேலை என்பதால், கொஞ்சம் செய்தாலும் மனம் திருப்தியடையும், அதுவே சாக்காகும்.
5) சிறியவனின் சிறப்புக்கு நேரம் அதிகமாகும்.
6) பெரியவனின் சிறப்புக்கு நேரமாகாது.

ஒரு நாள் முழுவதும் 20 பக்கம் படித்தவர், 50 பக்கம் படித்தவரைவிடத் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பார். **50 பக்கம் படித்தவர் அனைத்தையும் நினைவு வைத்திருப்பார். 20 பக்கம் படித்தவர்க்குப் பாதி மறந்துபோகும்.** என்ன செய்கிறோம் என்பதைவிட எப்படிச் செய்கிறோம் என்பது முக்கியம்.

- சிறப்பாகச் செய்யவேண்டும் என முயன்று சிறப்பாகச் செய்தால், வேலை அதிகமாக நடக்கவில்லை என்றாலும், குறை வாராது.
- சிறப்பாகச் செய்வதைச் சாக்காக்கி, கொஞ்சமாகச் செய்தால், ஏராளமான குறை வரும்.
- **மனப்பான்மை முக்கியம்.**

அன்பர் - சரணாகதி உயர்ந்தது என்று புரிந்தால் நல்லது. அது புரிவதற்கும் சரணாகதி பயன்படும் என்ற கருத்தை மீண்டும் ஒரு முறை கூறுவீர்களா?

நண்பர் - ஹெர்மன் ஹெஸ்ஸா என்ற ஜெர்மானியர் எழுதிய "சித்தார்த்தா" என்ற கதையில் 2000 ஆண்டுகட்கு

முன் சித்தார்த்தன் என்ற பிராமண இளைஞன் வீட்டைவிட்டு வெளியேறி சமணர்களுடன் சேர்ந்து, புத்தரைச் சந்தித்து திருப்தியடையாமல், கமலா என்ற தாசியுடனும், காமசாமி என்ற வியாபாரியுடனுமிருந்து சம்பாதித்து, கமலாவுக்கு ஆண் மகன் பிறந்து, அனைத்தையும் துறந்து ஓடக்கார வாசுதேவனைக் கண்டு, அவன் ரிஷியென அறிந்து ஜீவநதியின் ஞானோபதேசத்தை அறிகிறான்.

ஹெர்மன் 1946இல் நோபல் பரிசு பெற்றவர். புத்தரின் நிர்வாணம் அவரைக் கவர்ந்தது. அத்துடன் சம்சாரமும் சேர்ந்து பூர்த்தி பெறவேண்டும் என்று ஸ்ரீ அரவிந்தர் கொள்கையை, அது ஸ்ரீ அரவிந்தர் தத்துவம் என்றறியாமலேயே ஏற்றுக்கொண்டார். சித்தார்த்தனைக் கதாநாயகனாக்கி அவன் மூலம் தாம் கற்றதை எழுதுகிறார். கதையில் இங்கு நமக்கு முக்கியமான கருத்து ஒன்று, இரு இடங்களில் எழுகிறது.

- **சொல் அனுபவம் தாராது. அனுபவம், அனுபவத்தால் வரவேண்டும்.**
- **அனுபவத்தை அவரவர் அனுபவத்தில் பெறவேண்டும். ஒருவர் அடுத்தவருக்குக் கொடுப்பதில்லை.**

சித்தார்த்தன் சாஸ்திர விற்பன்னரான தகப்பனாரை மீறி வீட்டைவிட்டு வெளியேறி சமணர்களுடன் சேருகிறான். புத்தரையும் அதே கேள்வி கேட்கிறான். சாமர்த்தியம் பலன் தாராது என புத்தர் எச்சரிக்கிறார். முடிவாக புத்தர் வாயால் கேட்டுக்கொள்வதற்குப் பதிலாக கமலாவிடம் அனுபவத்தால் ஞானம் பெறுகிறான். பெறும்பொழுது நிர்வாணத்துடன் சம்சாரமும் சேரவேண்டும் என்ற ஞானம் உதயமாகிறது.



**சரணாகதி பெரிய தத்துவம் :**

புத்தரைச் சரணடைந்திருந்தால் அச்சரணாகதி அவன் அனுபவத்தால் 20 ஆண்டுகளில் பெற்ற ஞானத்தைப் பெற்றுத் தந்திருக்கும்.

**ஒரு வேலையை நெடுநாள் செய்து பெறும் அனுபவம், ஞானம், அந்த வேலையை அன்னைக்குச் சரணடைவதால் வரும் என்பது சரணாகதியின் பெருமை.**

அன்பர் - அது என்ன தத்துவம் என்பதே என் கேள்வி.

நண்பர் - குரு கீதையைப் போதிக்கிறார். இலக்கணம் பயிற்றுவிக்கின்றார். தகப்பனார் பெருஞ்செல்வம் பெற்று மகனுக்குத் தாம் கற்றதை போதிக்கிறார். சிஷ்யன் குரு கூறுவதை சிரத்தையாகக் கேட்டால் கொஞ்ச நாளில் கீதை விளங்கும். யோகம் பயின்றால் அதற்குரிய நேரத்தில் அது பலிக்கும். தகப்பனார் 30 ஆண்டுகளில் பெற்றதை மகன் ஓரிரு ஆண்டுகளில் கேட்டு அறிகிறான். 10, 20 ஆண்டுகளில் பயின்று அறிகிறான். இது அனைவரும் செய்வது. சரணாகதியின் சாரம் பின்வருமாறு:

- **குரு 30, 40 அல்லது 50 ஆண்டுகளில் பெற்ற ஞானம் அவர் அடிமனத்திலுள்ளது. அவர் பயிற்றுவிப்பது மேல் மனத்திலிருப்பது. சிஷ்யன் தன் மேல் மனத்தால் கற்று, அனுபவத்தால் நெடுநாளில் அவர் அடி மனத்திலுள்ளதைப் பெறுகிறான்.**
- **சரணாகதி சிஷ்யன் அடிமனத்தைத் திறந்து, குருவின் அடிமனத்துடன் தொடர்புகொண்டு, அவர் பெற்றதை சிஷ்யனுக்குத் தருகிறது.**

அன்பர் - சரணாகதியின் தத்துவத்தைப் புரிந்துகொள்ளவே சரணாகதியைப் பயன்படுத்தலாம் என்றீர்களே.

நண்பர் - கீதை சரணாகதியை முக்கியமாகக் கூறுகிறது. கீதை கூறும் சரணாகதி மோட்சம் பெற, திருவுருமாற அன்று. சகல தர்மத்தையும் சரணடைந்தால் புருஷோத்தமனை அடைந்து மோட்சம் பெறுவது கீதையின் சரணாகதி. ஸ்ரீ அரவிந்தர் கூறும் சரணாகதி நாம் யாருக்குச் சரணடைகிறோமோ அவராகவே நாமாவது - திருவுரு மாறுவது. சரணாகதியைப் பற்றி பகவானும், அன்னையும் ஏராளமாக எழுதியுள்ளனர். அவற்றைப் படித்து, பயின்று, முழுவதும் புரிந்துகொள்ள நெடுநாளாகும். அதற்குப் பதிலாக அவர்கள் சரணாகதியைப் பற்றி எழுதியவற்றை எல்லாம் படித்தபின், புரிந்துகொள்ள முயலாமல், நாம் படித்த விஷயங்கட்கு மனதால் சரணடைந்தால் - அவ்வளவும் அப்பட்டமான உண்மையென வாதம் செய்யாமல் மனம் ஏற்றுக்கொண்டால் - அதே நேரம் சரணாகதியை அடிமனம் ஏற்றுக்கொள்ளும்.

அன்பர் - புரியும் திறனை நம்பாமல், சரணடையும் திறனை நம்பவேண்டுமா?

நண்பர் - சர். ஐஸக் நியூட்டன் 400 ஆண்டுகட்கு முன் எழுதிய கணித நூல் - Principia Mathematica - கடினமானது எனப் பெயர் பெற்றது. S. சந்திரசேகர் நோபல் பரிசு பெற்றவர். அந்நூலைப் பயில ஆரம்பித்தார். 1 வருஷமாயிற்று அவருக்குப் புரிய. புரிவது எளிதன்று. Life Divine எழுதி 80 ஆண்டுகளாகின்றன. புரியவில்லை என்பதே நாம் கேள்விப்படுவது. எழுத்திற்கு அடிமனம் சரணடைந்தால் புரியாதது புரியும். சரணாகதி என்பது தத்துவம். தத்துவம் மட்டுமன்று, பலன் தரும் தத்துவம் (It is a knowledge that is power). சக்தியுடைய ஞானம்.



அன்பர் - சக்தியுடைய ஞானம் என்றால்?

நண்பர் - புரிந்தபின், புரிந்ததைப் பயின்று பலன்பெற வேண்டும்.

அன்பர் - உதாரணம்.

நண்பர் - வீட்டிற்கு எப்படி பெயிண்ட் அடிப்பது என்று கற்றால், கற்றதைப் பயன்படுத்தி பெயிண்ட் அடிக்கவேண்டும்.

கற்பது மனம் - கல்வி ஞானம்

பயில்வது உடல் - பெயிண்ட் அடிப்பது செயல்.

அடிமனத்தால் கற்பது என்பது, உடலால் கற்பது, சரணடைந்த மனத்தால் கற்பது.

அன்பர் - புரியவில்லை.

நண்பர் - மனமும், உணர்வும் பவ்யமாக அடங்கி அமைதியாகக் கற்பது அடிமனத்தால் கற்பது எனலாம். அப்படிக் கற்றால், நாமே பெயிண்ட் அடிப்பதற்குப் பதிலாக வீடு தானே பெயிண்ட் அடித்துக்கொள்ளும். வாடகை வீடானால் வீட்டுக்காரர் இதுவரை முடியாது என்றவர் தாமே வந்து பெயிண்ட் அடித்துத் தருவார்.

அன்பர் - மனத்தைத் தொடும்படியான உதாரணமாக இருந்தால் நல்லது.

நண்பர் - ஒரு சிக்கலான கேஸ். அனுபவமான வக்கீல், “என் 31 வருஷ அனுபவத்தில் இதுபோன்ற கேஸைப் பார்த்தது இல்லை. இது சட்டத்திற்கு உட்பட்ட சிக்கலாக இல்லை”

என்று ஒன்றும் செய்ய முடியாது என கை விரித்துவிட்டார். கட்சிக்காரர் அன்பர். வக்கீல் கை விரித்தாலும், வக்கீல் சொல்வதை அப்படியே ஏற்பது, அடுத்த வக்கீலை நாடுவதில்லை எனக் கட்சிக்காரர் முடிவு செய்தார். இந்த விவாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்த அனுபவமற்ற வக்கீல் சட்டத்தின் வேறு அம்சத்தைச் சுட்டிக்காட்டி வழி சொன்னார்.

அன்பர் - இந்தக் கேஸை விவரமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

நண்பர் - கேஸ் நடக்கவில்லை.

அன்பர் - ஆச்சரியமாக இருக்கிறதே.

நண்பர் - இளம் வக்கீல் கூறியதை எதிர்கட்சிக்காரர் கேட்டவுடன் ராஜினாமா எழுதிக் கொடுத்துவிட்டார்!

அன்பர் - இது அன்னையா? சரணாகதியா?

நண்பர் - **சரணாகதி நம் மனநிலையை அன்னையாக்கவல்லது.**

✯ ✯ ✯



## அன்பர் கடிதம்

ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய.

ஸ்ரீ அரவிந்தர், மஹாசக்தி அன்னை மலர்ப்பாதங்களே சரணம்.

### என் கணவரின் வேலை : (அன்னையின் அருள்)

நான் அன்னையிடம் வந்தது 2000, April 14th. நான் அம்பத்தூர் தியான மையத்தில் இரவு 7 - 7.30 கூட்டுத் தியானம் செய்தேன். அதன் பலன், ஏழு வருடங்களாக நிரந்தர வேலையில்லாமல் இருந்த அவர், நல்லதொரு companyயில் ரூ.7,500/- ஊதியத்தில் வேலையில் சேர்ந்தார். அன்னை எதிர்பார்க்கும், hard work, sincerity, punctuality மற்றும் job alignment என்ற நல்ல qualities அவரிடம் இருந்ததால், May 2nd, 2000 வேலையில் அன்னையின் அருளால் சேர்ந்தார். இப்போது, அவருடைய ஊதியம் ரூ.10,000/-. எங்கள் குடும்பத்தில் சந்தோஷமும், குதூகலமும் அன்றுதான் தொடங்கியது.

### குழாயில் தண்ணீர் வந்தது : (ஸ்ரீ அரவிந்தரின் அருள்)

நான் என் தாயார் வீட்டிற்குச் சென்றிருந்தேன் (Mambalam - Brindavan St. extn.,). அவர்கள் வீடு, மூன்றாவது மாடியில் உள்ளது. அன்று காலை 6 மணி முதல் குழாயில் தண்ணீர் வரவில்லை. என் தந்தையிடம் கூறியபோது, watchman மோட்டார் போடுவார், இன்னும் சிறிது நேரத்தில் தண்ணீர் வந்துவிடும் என்றார். ஆனால் வரவில்லை. Kitchen குழாயில் மட்டும் தண்ணீர் வந்தது. ஒவ்வொருவராகப் பிடித்து குளித்து, சமையல் வேலையும் முடிந்தது. நான் மட்டும்தான் இன்னும் குளிக்கவில்லை. பாத்ரூமில் தண்ணீர் இருக்கும் என்ற தைரியத்தில், தலையில் எண்ணெய் வைத்துக்கொண்டு சீயக்காயையும் எடுத்துக்கொண்டு குளிக்கச் சென்றேன். Bathroomஇல் அரை bucket

தண்ணீர்தான் இருந்தது. என் தம்பியின் மனைவி, கதவைத் தட்டி "அக்கா, tankஇல் தண்ணீர் இல்லை, motor repair, அதனால் நீங்கள் குளிக்கவேண்டாம், வெளியே வாருங்கள்'' என்று கூறிப் போய்விட்டாள். அந்த வேளையில் நான் தலையில் சீயக்காயை தேய்த்துக்கொண்டுவிட்டேன். இப்போது நான் குளித்தே ஆக வேண்டும். உடனே, நான் ஸ்ரீ அரவிந்தரை மனதில் நினைத்துக்கொண்டு, Savitriஇல் page 571 – Then suddently there came on her the change - 32 lines - அதைக் கூறத் தொடங்கினேன். எங்கிருந்துதான் தண்ணீர் வந்ததோ தெரியாது, 6 – 7 bucket தண்ணீர் வந்தது. என் கண்ணில் கண்ணீரும் வந்தது.

குளித்து முடித்துவிட்டு வெளியே வந்து, ஸ்ரீ அரவிந்தரின் படத்தைப் பார்த்தேன். அவர், "நன்றாகக் குளித்தாயா?" என்று கேட்பதுபோலப் புன்னகை செய்தார். உடனே என் இரு கரங்களைக் கூப்பி அவருக்கு நன்றி கூறினேன்.

என் வாழ்வில் நான் கண்ட அனுபவத்தில், மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி வெளியீடான, "அருளமுதம்", ஸ்ரீ அரவிந்தரின் "Savitri" இந்த இரண்டுமே, எல்லா அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அன்பர்கள் வீட்டில் இருக்கவேண்டிய புத்தகங்கள்.

✲ ✲ ✲

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சத்தியம் தெரிந்தால் கண்ணை மூடிக்கொண்டு அதை நாடலாம். வழிவகை தெரிந்தால், சந்தர்ப்பங்களை மாற்றிப் பலன் பெற முயலலாம். சாரம் தெரிந்தால் அதை முழுவதும் ஆளமுடியும்.

*ஒரு பொருளைப் பயன்படுத்தலாம், செய்யலாம், திருவுரு மாற்றலாம்.*





## சத்திய ஜீவன்

*(ராணிப்பேட்டை தியான மையத்தில் 21.2.2002 அன்று திருமதி. வசந்தா லக்ஷ்மிநாராயணன் நிகழ்த்திய உரை).*

கிராமத்திலிருந்து நகரத்திற்குப் போவது முன்னேற்றம். அதனால் நகரம் பெருநகரமாகிறது. எப்படியும், எவ்வளவு பேர் நகரத்திற்குப் போனாலும் ஓரளவு மக்கள் கிராமத்தில் இருப்பதைத் தவிர்க்க முடியாது என்பதுபோல் சத்திய ஜீவன் பொய்ம்மையையும், அறியாமையையும் அழித்துப் பிறக்கிறான். அதைத் தொடர்ந்து உலகில் சத்திய ஜீவன்கள் பெருகினாலும், அறியாமையை விட மனம் வாராத மக்களும் ஓரளவு இருப்பார்கள் என்கிறார் பகவான்.

மனிதனாய் பிறந்தவன் நிலம் பயிரிட வேண்டும் என்பது அக்காலம். அதைக் கடந்த படிப்பும், வியாபாரமும் உண்டு என்பது தற்காலம். மனத்தாலானவன் மனிதன் என்பது முடிவான உண்மையில்லை, சத்தியஜீவியமே மனிதனுக்கு அடிப்படையான உண்மை என்பதை நிரூபிப்பவன் சத்திய ஜீவன்.

அன்றைய கீதோபதேசம் பக்குவமான ஆத்மாவுக்கு விரைவில் மோட்சம் பெற சரணாகதியைக் காட்டியது. அது தனி மனிதனுக்குரிய இலட்சியம். இன்று எந்த இலட்சியமும் மனித குலத்திற்குரியதாக இருக்கவேண்டும். கீதோபதேசம் இன்று உலகுக்குப் பயன் தாராது. ஸ்ரீ அரவிந்தம் மனித குலத்தைக் கடந்து பிரபஞ்சத்திற்குரிய ஆத்மாவை இலட்சியமாகக் கொள்கிறது. பரமாத்மா ஜீவாத்மாவாகும் இலட்சியம் ஸ்ரீ அரவிந்தம். கண் பார்வையில்லாதவன், காது கேட்காதவன், ஊனமுற்றவனுக்குப் பயன்படாத இலட்சியத்தை உலகம் இன்று ஏற்பதில்லை. அடுத்த கட்டத்தில் ஏரி, மலை, காடும், பாதிக்கப்படாத வாழ்வை உலகம் நாடுகிறது. தனி மனிதனைக்

கடந்து மனிதகுலத்தின் நன்மையை நாடும் உலகம் சத்திய ஜீவனை நோக்கிப் போகிறது.

**புறம், அகமாவதே இதைச் சாதிக்கும்**
**என ஸ்ரீ அரவிந்தம் கூறுகிறது.**

சென்ற 1950வரை உலகம் தலைவர்களைப் பின்பற்றியது. அதன்பின் - சத்திய ஜீவன் 1956இல் புவிக்கு வந்தபின் - தலைவர்கள் போய் மனிதன் தன் சொந்த அபிப்பிராயத்தை நாடுகிறான். அதனால் தலைவர்கள் இன்று மக்களைப் பின்பற்றுகிறார்கள். புறத்திலுள்ள தலைவர் சொல்லைக் கைவிட்டு அகத்திலுள்ள அறிவை மனிதன் நாடுகிறான்.

**All-inclusive self, nor selfishness.**
**சுயநலம் போய் பரநலம் சுயநலமாவது சத்திய ஜீவன்.**

இன்று நாட்டில் வரும் பெரிய சௌகரியங்களில் பெரும்பாலானவற்றை மனிதன் அனைவருடனும் அனுபவிக்க முடியுமே தவிர, தான் மட்டும் அனுபவிக்க முடியாது. அன்று நம் பையனுக்கு மட்டும் கல்வி போதிக்க முடிந்தது, பயிரிட்டு நாம் மட்டும் சாப்பிடலாம், குளம் என்றால் கொஞ்சம் பேர் மட்டும் அனுபவிக்க சட்டம் போட்டார்கள். இன்று பஸ், ரயில், தபால், சினிமா, ரேடியோ, T.V., பள்ளி, எதுவும் அனைவரும் பெறாமல் கொஞ்சம் பேர் மட்டும் பெற முடியாது.

திறமை மனிதனுக்கு, கருவிக்கில்லை. எத்தனை ஆயிரம் பக்கம் எழுதினாலும் பேனாவுக்கு அறிவு வருவதில்லை. சத்தியஜீவியம் ஒரு கருவியைப் பயன்படுத்தினால் கருவிக்கும் அறிவு வரும். கம்ப்யூட்டர் காவியம் எழுதுகிறது, கணக்குப் போடுகிறது, spelling, இலக்கணம் திருத்துகிறது. கம்ப்யூட்டருக்கு புத்தி வருகிறது. நம்மால் அந்த வேகத்தில் சிந்திக்க முடியாது. சத்தியஜீவிய சக்தி உலகில் செயல்படுவதால் கருவி கர்த்தாவாகிறது.



- ***நாம் சத்தியத்தை நாடுகிறோம்.***
- ***சத்திய ஜீவனுக்கு அத்தேவையில்லை, அவனே சத்தியம்.***
- ***நமக்கு அறிவு வந்தால் அதைச் செயல்படுத்தலாம்.***
- ***சத்திய ஜீவனுடைய அறிவுக்கே செயல்படும் திறன் உண்டு, நினைத்தால் நடக்கும்.***
- ***நாம் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் எனச் செயலைப் பெருக்க வேண்டும்; சத்திய ஜீவனில் ஒன்று அனந்தமாகும்.***

மனத்தின் அனுபவமும், சுபாவமும் சற்று மாறியிருக்கும். ஆனால் சத்தியஜீவிய சுபாவத்தில் அனுபவமே சுபாவமாக இருக்கும். இது மனத்திற்கில்லை. சிறுபிள்ளையின் சுபாவம் விளையாடத் தூண்டுகிறது. அவனுக்குத் தேவையான அனுபவம் படிப்பு. சில சமயம் படிப்பைப் புறக்கணித்து விளையாடப் போகிறான், பல சமயம் விளையாட்டைப் புறக்கணித்து படிக்கிறான். இவற்றை நாம் அறிவோம். கல்லூரி முடித்து விளையாட்டைத் தொழிலாகக் கொண்டவனுக்கு (professional player) இந்த மாறுபாடில்லை. அவனுடைய சுபாவமும், அனுபவமும் ஒன்றுபட்டுள்ளன. விளையாட்டை விட்டுவிட்டுப் படிப்பையே ஆர்வமாக ஏற்றுக்கொண்டவனுக்கு (scholar) அவன் படிப்பே விளையாட்டு போன்றது. அவனுக்கும் அந்த மாறுபாடில்லை. நாம் எத்தனை வயதானாலும் நம் தேவையும், சுபாவமும் மாறுபடுவதைப் பார்க்கிறோம். சத்தியஜீவியத்தில் தேவையே சுபாவமாகவும், சுபாவமே தேவையாகவும் அமையும். அவற்றுள் வேறுபாடு இருக்காது.

மனம் சிறியது, சத்தியஜீவியம் பெரியது. எனவே சத்தியஜீவியத்தை மனத்தால் விளக்கினால் விளக்கம் தடம் மாறிப் போகும். அதிகபட்சம் தெய்வீக மனத்திலிருந்து சத்தியஜீவியத்திற்குப் போவதை ஓரளவு கூறலாம். மகாத்மா காந்தி எரவாடா ஜெயிலில் இருக்கும்பொழுது இராஜாஜி அவருக்கு உலகப் பிரசித்திப் பெற்ற செய்யுளை அனுப்பியிருந்தார். அவரைப் போய் சந்தித்தபோது அந்தச்

செய்யுளுக்கு இராஜாஜி விளக்கம் கூறினார். பிரபலமான ஆங்கிலக் கவி தாம்சன் எழுதிய கவிதை அது. பக்தன் ஒருவன் உருக்கமாக ஆண்டவனை வேண்டுகிறான். அவன் உருக்கத்தை மெச்சி ஆண்டவன் வானுலகிலிருந்து இரதத்தில் வருகிறான். ஆண்டவனை உருக்கமாக அழைத்த பிறகு, ஆண்டவனே வருவான் என்று பக்தன் எதிர்பார்ப்பதில்லை. ஆண்டவனைக் கண்டபிறகு மனைவிமீது பாசம் எழுகிறது. அவளிடம் போய் அடைக்கலம் கேட்கிறான். ஆண்டவனை மறுத்து நீ வருவதால் உனக்கு அடைக்கலம் இல்லை என்கிறாள். அவனுக்குப் பாசமுள்ள இடங்களில் எல்லாம் ஓடி ஒளிகிறான். அவை எதுவும் புகலிடம் கொடுக்கவில்லை. முடிவாக ஆண்டவனிடம் சரண் அடைகிறான் என்பது அந்தக் கவிதை. கவிதையின் தலைப்பு ''வானுலக வேட்டை நாய்கள்'' Hound of Heaven. இராஜாஜியும், மகாத்மா காந்திஜியும் இந்தக் கவிதையை விமர்சித்தனர். அவர்கள் பேச்சிற்கு மேற்பார்வையாக ஒரு D.S.P. இருந்தார். D.S.P.க்கு இலக்கியப் பரிச்சியம் இல்லை. I.G.யிடம் போய் ரிப்போர்ட் கொடுத்தார். அவர்கள் என்ன பேசினார்கள் என்று I.G. கேட்டபொழுது காந்திஜியும், இராஜாஜியும் நாய்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றார். மனம் சத்தியஜீவியத்தை விவரித்தால் விளக்கம் இதுபோன்ற விபரீதமாகும்.

சத்தியஜீவியம் மின்னல்போல் திடீரென்று தாக்குவது இல்லை. விதையிலிருந்து முளை எழுவதுபோல் சிறிது சிறிதாக வெளிவரும். தெய்வீக மனத்தின் மூலமாகவும், யோகி மனத்தின் மூலமாகவும், அதன் கீழுள்ள நிலைகள் மூலமாகவும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை சத்தியஜீவியம் வெளிப்படுத்தும். 1920இல் அன்னை வந்தவுடன் யோகம் தெய்வீக மனத்தின் சக்தியால் நடந்தது. பகவான் ஸ்ரீ அரவிந்தருக்கு தம் யோகத்தை தெய்வீக மனத்தால் பூர்த்தி செய்ய முடியாது என்று தெரியும். அவர் அன்னையுடன் நெடுநாள் பேசி முடிவெடுத்து சத்தியஜீவிய சக்தியை பயன்படுத்த முடிவு செய்தார். அதுவரை தெய்வீக மனத்தின் சக்தி அற்புதங்களை



நிகழ்த்திக்கொண்டு இருந்தது. திருஞானசம்பந்தருக்குப் பார்வதி பால் கொடுத்ததும், சிறுதொண்டருடைய குழந்தை உயிர் பெற்றதும் போன்ற அற்புதங்கள் அவை. ஆஸ்ரமத்தில் அந்த நாளில் ஆஸ்ரமக் கட்டிடத்தை விட்டு வெளியே போகக் கூடாது என்பது அன்னை உத்தரவு. அதை மீறி ஒருவர் கடைக்குப் போனார். கடையில் இருக்கும்பொழுது அவரின் கால்களைக் காணவில்லை. உடனே ஆஸ்ரமம் திரும்பிவந்தார். ஆஸ்ரமக் கட்டிடத்தில் நுழைந்தவுடன் கால்கள் வந்ததைக் கண்டார். ஒரு சமயம் ஆஸ்ரமக் கட்டிடம் ஒன்றில், சுவரில் விரிசல் விழுந்துவிட்டது. அன்னையிடம் கூறினார்கள், விரிசல் மறைந்துவிட்டது. தியோன் மின்னலை திசை திருப்பியதை அறிவோம். இவை தெய்வீக மனத்தின் அற்புதங்கள். 1926க்கு பிறகு சத்தியஜீவிய சக்தியால் பகவான் செயல்பட ஆரம்பித்தபின் இதைவிடப் பெரிய அற்புதங்கள் ஏராளமாக நடந்துள்ளன. ஆனால் அவை பார்வைக்கு அற்புதங்களாகத் தெரியாது, இயல்பாக நடந்ததாகத் தெரியும். எவ்வளவு பெரிய அற்புதமானாலும் இருக்கும் சந்தர்ப்பங்களில் இயல்பாக நடந்ததுபோல் சத்தியஜீவிய சக்தி செயல்படும். அதற்குரிய காரணம் மனதிற்குத் தென்படும்படி அமைந்துவிடும்.

ஊழல் மலிந்த சமயம், ஒரு இலட்ச ரூபாய் கடனுக்கும் லஞ்சம் கொடுக்க வேண்டிய officeஇல் ஒருவர் 2 கோடி கடன் பெற முயன்றார். மிக விரைவாகப் பணம் கிடைத்ததுடன் அவரிடம் எவரும் லஞ்சம் கேட்கவில்லை. இது ஆச்சரியம் என்று கருதாதபடி ஒரு காரணம் ஏற்பட்டுவிட்டது. அவருடைய பிராஜக்ட்(project)ற்கு bank வாடிக்கையாளர்களைத் தேடிக்கொண்டு இருந்ததனால் லஞ்சம் வாங்கவில்லை என்று புரிந்துகொண்டோம். இதுவே சத்தியஜீவிய சக்தியின் திறன். ஒரு பெரிய ஆச்சரியமான காரியத்தை இயல்பாகத் தோற்றுவிக்கும்.

இதுவரை பரிணாமம் மேல்மனம், அடிமனம் என இரு பகுதியாக இருந்தது. மேல்மனம் என்பது ஆழத்திலுள்ள ஜீவியம்

பொங்கி வருவதால் உருவாவது. அடிமனம் என்பது அப்படிப் பொங்கி வரும் ஜீவியமும், மேலிருந்து வரும் சக்தியும் சந்திப்பதால் எழுவது. மேலிருந்து வரும் அருள் அடிமனத்துள் சென்றாலும், மேல்மனத்தை உருவாக்கவும் பயன்படுகிறது. சத்தியஜீவியப் பரிணாமத்தில் மேல்மனம், அடிமனம் என்ற வேற்றுமை இருக்காது. இந்த வேற்றுமை அறியாமைக்குரியது. இந்த வேற்றுமை அழிக்கப்படும், அதுவே சத்தியஜீவியம் உற்பத்தியாவதற்கு முதல் கட்டம்.

மாட்டின் முதுகின்மேல் ஓர் அடி தூரத்தில் ஒரு வண்டு பறந்தால் அது மாட்டிற்குத் தெரியாது. ஆனால் மாடு வாலால் அந்த வண்டை அடிக்கும். மாட்டின் பார்வையில் அது இல்லையே தவிர மாட்டின் சூட்சுமத் தேகத்திற்குள் அந்த வண்டு வந்தவுடன் மாட்டிற்கு, பார்க்காமலே தெரிகிறது. மாட்டின் சூட்சுமத் தேகம் அதைச் சுற்றி ஓர் அடி தூரத்திற்கு இருக்கும். யானையைப் பிடிப்பதற்கு பெரிய பள்ளம் தோண்டி பள்ளத்தின்மீது இலைகளைப் போட்டு மூடி வைத்திருப்பார்கள். இலைகளைப் பார்த்து அதைச் சாப்பிட விரும்பி யானைப் பள்ளத்தில் விழும் என்று எதிர்பார்க்கிறார்கள். எங்காவது பள்ளம் இருந்தால், 100 அடி தூரத்தில் வரும்போது யானைக்கு அது தெரியும். யானை பள்ளத்தில் விழாது. அதனால் யானையை பல பக்கங்களிலிருந்து விரட்டி பள்ளத்தில் விழ வைப்பார்கள். ஒட்டகத்திற்கு ஒரு மைல் தூரத்திலுள்ள தண்ணீர் வாடைத் தெரியும். இவை சூட்சுமஞானம். நமக்கு இன்று ஐம்புலன்கள் உண்டு. நமக்கு 12 புலன்கள் இருந்ததாகவும், மனம் வளர்ந்தபிறகு பல புலன்கள் அழிந்து ஐந்து புலன்களில் நிற்பதாக அன்னை கூறுகிறார். **புலன்கள் அடிமனத்தைச் சேர்ந்தவை. இன்றும் நம் அடிமனம் நாமறியாதபோதிலும், நம் கண்ணில், காதில்படாத ஒலிகளை, காட்சிகளை அறிந்து பதிவு செய்து வருகிறது.** மேல் மனத்தில் அகந்தை இருப்பதால் அது அகந்தைக்குரிய புலன்கள் கூறுவதை மட்டும் அறியும். அடிமனத்தில் அகந்தை இல்லை என்பதால் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும்



அறியும் திறன் உள்ளது. சைத்தியப் புருஷன் இந்த அடிமனத்திலுள்ள குகையின் உள்ளே இருக்கிறது. சைத்தியப் புருஷனுக்கு அடிமனத்திற்கு தெரிந்த அனைத்தும் தெரியும்.

சத்திய ஜீவன் பிறப்பதற்குமுன் பல கட்டங்களுண்டு. அந்த கட்டங்களில் இருள் ஒளியாகவும், ஒளி பேரொளியாகவும் மாறுகிறது. ஆனால் இந்தக் கட்டங்கள் பரிணாமத்தை மாற்றமுடியாது. ஏனெனில் பரிணாமம் எந்த வேகத்தில் செல்லவேண்டும் என்பதை நிர்ணயிக்கும் அதிகாரம் சத்தியஜீவியத்திற்குண்டு. உலகில் வாய்ப்பு அதிகமாக இருந்தால் மனிதன் வேகமாக முன்னேறுவான், வாய்ப்பு குறைவாக இருந்தால் வேகமாக முன்னேற முடியாது என்பது உண்மையானாலும், தான் எந்த அளவு முன்னேற வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் திறன் மனிதனுக்குண்டு. அதுபோல் சத்தியஜீவியத்திற்கு பரிணாமத்தை நிர்ணயிக்கும் திறனுண்டு. இந்தக் கட்டங்களால் அதை நிர்ணயிக்க முடியாது. சத்தியஜீவியத்தைப் பொருத்தவரையில் அதுவே தன்னை நிர்ணயித்துக் கொள்ளும். சிருஷ்டியையே அது நிர்ணயிப்பதால் பரிணாமம் சிருஷ்டியின் பகுதி என்பதால் எந்த நிபந்தனைகளும் சத்தியஜீவியத்தைக் கட்டுப்படுத்தாது. நம் நாட்டில் அதுபோன்ற உதாரணம் சொல்லவேண்டுமானால் அதுபோன்ற அதிகாரத்தையுடையது டெல்லி பார்லிமெண்ட். அதுவே நாட்டின் எல்லா நடைமுறைகளையும் நிர்ணயிக்கும். பார்லிமெண்டின் அதிகாரத்தை நிர்ணயிக்க நாட்டில் அதற்கு வெளியே எந்த சக்தியும் இல்லை.

சத்தியஜீவியம் ஒற்றுமையின் அடிப்படையில் ஏற்பட்டது. பிரிவுகள் என்று இருந்தாலும் அவை சத்தியஜீவியத்தில் பிரிக்கப்படாதவை. புருஷனும், பிரகிருதியும் நம் மனத்தில் தனித்தனியாக தெரிகின்றன. தெய்வீக மனம்வரை உயர்ந்தாலும் அவை பிரிந்தே நிற்கும். அவை தெய்வீக மனத்தைக் கடந்து சத்தியஜீவியத்துள் வந்தால், தனித்தனியாக இருந்தாலும் பிரிக்கப்படாத நிலையில் இருக்கும். ஒரு நாணயத்தில் தலை, பூ என்று இரு பகுதிகள் இருந்தாலும்,

நாணயத்தில் அதை இரண்டாகப் பிரிக்க முடியாது. அதேபோல் மனத்திலிருந்து தெய்வீக மனம்வரை சத்து, சித்து, ஆனந்தம் பிரிந்து தெரியும். சத்தியஜீவியத்தில் பிரிந்த நிலையிலும் ஒன்றாகவே இருக்கும். ஒரு மனிதன் கணவன், தகப்பனார், என்ற இரு நிலைகளை உடையவனானாலும், அவர்கள் இரு வேறு மனிதர்கள் அல்ல. ஒரே மனிதனுடைய இரு உறவுகள். அதுபோல் சத்தியஜீவியத்தில் சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று அம்சங்கள் ஒன்றாகவே இருக்கும். மேலும் ஒருபடி உயர்ந்து சென்றால், அந்த பிரிந்த தோற்றமும் இருக்காது, அவை ஒன்று மற்றொன்றில் மறைந்துவிடும். தோற்றத்திலும் பிரிவினை இருக்காது. சர்க்கரையும் இனிப்பும் பிரிந்து காண்பது இல்லையல்லவா? சர்க்கரையே இனிப்பு, இனிப்பே சர்க்கரை. அது சச்சிதானந்தத்திற்கு உண்டான ஐக்கியம்.

தெய்வீக மனத்தில் பிரிவு முழுமையாக்கப்பட்டு, முழுவதும் பிரிந்துவிடும். இந்தப் பிரிவினை அறியாமைக்குக் காரணம். பிரிவினையால் அறியாமையை ஏற்படுத்தி அறியாமையால் தான் பாதிக்கப்படாதபடி தெய்வீக மனம் செயல்படும். சத்தியஜீவியம் அறியாமையை விலக்காது. அதனுள் ஊடுருவிச் சென்று அறியாமையை அறிவாக மாற்ற முயலும். கைதிகளை அவர்களுடைய குற்றத்திற்குத் தக்கவாறு தனி அறைகளில் அடைத்து வைப்பதுண்டு, வெளியில் அனுமதிப்பதும் உண்டு. சில கைதிகளுக்கு வேலை கற்றுக் கொடுத்து நல்ல மனிதராக மாற்ற முயல்வதும் உண்டு. அதுபோன்ற கட்டங்கள் தெய்வீக மனத்திலும், சத்தியஜீவியத்திலும் உண்டு.

சத்தியஜீவனுக்கு மூன்று நிலைகள் உண்டு.

1. **சத்தியஜீவியத்தைக் கடந்து போகும் ஆத்மா.**
2. **தெய்வீக மனத்திற்குரிய ஆத்மா.**
3. **யோகி மனத்திற்குரிய ஆத்மா.**



சத்திய ஜீவன் தன்னுள் பிரபஞ்சத்தையும், பரமாத்மாவையும் பிரதிபலிப்பான். அவன், அவனுடைய வாழ்வு அற்புதமான கலை உணர்வு மலரும் வாழ்வாக அமையும்.

மனிதன், பிரபஞ்சத்துடைய ஆத்மா, பரமாத்மாவைப் பிரதிபலிக்கும் மனிதன் ஆகிய மூன்று நிலைகளும் சத்திய ஜீவனில் சுமுகமாக இணைந்து நிறைவு பெறும். உதாரணமாக மனிதன், விலங்கு, தாவரம் இணைந்து வாழும் உலகில் மனிதன் அவை இரண்டையும் தன்னுடைய ஆட்சிக்குள் கொண்டுவந்து விட்டான். அவன் விருப்பப்படி காட்டை அழிப்பான், நிலத்தைத் திருத்துவான், விலங்கினங்களைச் சுட்டுக் கொல்வான். அவை இரண்டும் தனக்கு உட்படவேண்டும் என்பதே நோக்கம். இது சுமுகம் அன்று. விலங்கும், தாவரமும் இன்று சுமுகமாக வாழ்கின்றன. அவைகளுக்குள் நேரடியான போட்டி இல்லை. மனிதன், விலங்கு, தாவரங்களுடன் சுமுகமாக வாழவேண்டுமானால் இன்று செய்யும் பல காரியங்களை அவனால் செய்ய முடியாது. விலங்கும், தாவரமும் இன்று அவனுக்கு உணவு. அந்த உணவை அவன் கைவிட வேண்டியிருக்கும். நம் நாட்டில் சன்யாசிகள், வாழ்க்கையைத் துறந்தாலும், அவர்களுடைய தேவைகளை நாடுதான் பூர்த்தி செய்கிறது. சக்தியுள்ள எந்தச் சாமியாரைக் கண்டும் மக்கள் பயப்படுவார்கள், அவருக்கு சபிக்கும் திறன் உண்டு, தவறாது சபிப்பார். ஒரு மஹானுக்கு சக்தி இருந்தால் உலகம் அவரை ஏற்றுப் போற்றுவது வழக்கம் அன்று. அவர்களைக் கொலை செய்ய முயன்றது, கொலை செய்தது; கொடுமைப்படுத்தியது, ஊரைவிட்டு விலக்கியது; தூக்கிலிட்டது, நாம் அறிவோம். இன்று ஆன்மீகப் பரம்பரையான நம் நாட்டில் மக்களும் மஹான்களும் போட்டியிட்டு, ஜெயித்தபின் சுமுகமாக வாழ்கின்றனரே தவிர அவர்களிடையே சுமுகம் இல்லை எனில் பிரபஞ்சத்துடைய ஆத்மாவிற்கும் பரமாத்மாவைத் தன்னுள்கொண்ட ஆத்மாவிற்கும், ஆன்மீக மனிதனுக்கும் சுமுகம் என்பது சுலபமான விஷயம் அன்று.

சத்திய ஜீவன் முதலில் நாம் காணும் பிணக்கைக் காணமாட்டான். அவனுடைய அகந்தை அழிந்துவிட்டது. உலகத்தைப் பற்றி நமக்கு இல்லாத அறிவு அவனுக்குண்டு. உதாரணமாக நமக்கு சமுத்திரம் தெரிவதில்லை. சற்று அகந்தை விலகிய நேரம் சமுத்திரம் தெரிந்தால் அதை நமக்குப் பயன்படுத்தத் தோன்றுகிறது. சத்திய ஜீவனுக்கு அகந்தை இல்லாததால் எந்த நேரமும் சமுத்திரம் தெரியும். நமக்குத் தெரியும் சமுத்திரம்போல் அவனுக்குத் தெரியாது. இந்த சமுத்திரம் ஸ்தாணுவாகவும் தெரியும், சச்சிதானந்தம் பிரம்மமாகவும் தெரியும், அதையும் கடந்த நிலையில் அற்புதக் காட்சியாகவும் தெரியும். நமக்குப் பிணக்காகத் தெரிவது அவனுக்கு சுமுகமாகத் தெரியும். இருவர் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டால் அது சண்டையாகத் தெரிகிறது; நாம் அவர்களை விலக்குகிறோம். ஆனால் சத்திய ஜீவனுக்கு அது சண்டையாகத் தெரியாது, அறிவு பெறும் அனுபவமாகத் தெரியும்; அதனால் அவர்களை விலக்க நினைக்கமாட்டான். (**அவன் அங்கு இருப்பதால் அவர்கள் சண்டையிட்டுப் பெறவேண்டிய அறிவு அவனுடைய பார்வையிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கும். சண்டையிட்டு அறிவு பெற்று அடையவேண்டிய சுமுகம் அவர்களை வந்து அடையும்.**) அதை அவன் காண்பதால் அவனுடைய பார்வை வேறு; நம்முடைய பார்வை வேறு. அவனையே ஒருவர் தாக்க வருவதாக வைத்துக்கொண்டால், (அதுபோன்ற நிகழ்ச்சி நடக்காது) அத்தாக்குதல் மூலமாகத் தனக்கு என்ன ஞானம் கொடுக்க விரும்புகிறான் என்று அறிவான். அதை அறிந்து அந்த ஞானத்தைப் பெற முயல்வான், வருபவன் தாக்கமாட்டான். இது சத்திய ஜீவனுக்கும், மனிதனுக்குமுள்ள வேறுபாடு. அவன் தன்னை வெளிப்படுத்தும்போது பிரபஞ்சம் பிரவாகமாக வெளிப்படும். ஓர் அகண்ட சுமுகம் அவன்மூலம் உலகத்தை வெளிப்படுத்துவது சத்திய ஜீவனுக்கும், சத்தியஜீவிய சுபாவத்திற்கும் உள்ள அடையாளம். பகவான் ஸ்ரீ அரவிந்தர் உலகம்



சுதந்திரம் பெறவேண்டும் என்பதை தம்முடைய ஆத்மானுபவமாக 1910இல் வெளியிட்டார். அது 1945இல் உலகிலுள்ள 45 அடிமை நாடுகளுக்கு விடுதலை அளித்தது. மஹாயுத்தம் முடிந்தபின் உலகம் சுமுகத்தால் சூழப்படவேண்டும் என்று அவரிடமிருந்து தோன்றி பரவிய ஞானஒளி 1968இல் அதற்குரிய அடையாள நகரமாக 'ஆரோவில்' மாறியது. 20 ஆண்டுக்குப்பின் 1989இல் அது உலகில் பூர்த்தியாகி வல்லரசுகள் ஆயுதங்களைக் கைவிட்டன.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## ஸ்ரீ அரவிந்த சுடர்

வாய்விட்டுப் பேசினால் புரியக்கூடியதுண்டு. மௌனமாகப் படிப்பதால் புரியக்கூடிய உயர்ந்த கருத்துண்டு. முனிவர் மனம் எண்ணத்தின் உதவியில்லாமல் அறியும். ரிஷியின் மனம் காட்சியாகவே காணும். புரிவதென்பதே அங்கில்லை. யோகிக்கு ஜோதியும் தேவையில்லை. தானே புரியும். சத்தியஜீவியத்திற்கு ஞானமே தேவையில்லை.

*வாய்விட்டுப் படித்தும், மௌனம் காத்தும், திருஷ்டியில் பார்க்கும் ஞானம் சத்தியஜீவியத்திற்குத் தேவையில்லை.*

**Sri Aurobindo's hernia bandages; Sadhaks are editing his books. In the subtle plane an Italian told Sri Aurobindo not to touch some books without the permission of The Mother.**

**ஸ்ரீ அரவிந்தருக்கு ஹெர்னியா கட்டுப் போட்டிருந்தது. சாதகர்கள் அவர் எழுதியவற்றைத் திருத்துகிறார்கள். சூட்சும உலகில் ஓர் இத்தாலியர் ஸ்ரீ அரவிந்தரை அன்னை உத்தரவில்லாமல் சில புத்தகங்களைத் தொடக்கூடாது என்றார்.**

*1950*இல் ஸ்ரீ அரவிந்தர் சமாதியானபின் *1959*வரை அன்னை அவரை சூட்சும உலகில் காணவில்லை. *1959*இல்தான் முதல் முதலில் சூட்சும உலகில் அன்னை ஸ்ரீ அரவிந்தரைச் சந்தித்தார். அது முதல் தினமும் அவரால் ஸ்ரீ அரவிந்தரைச் சந்திக்க முடிந்தது.

கம்ப்யூட்டர், பார்வைக்கு டைப்ரைட்டர் போலிருக்கும். அனுபவமில்லாதவர் டைப்ரைட்டர் என்றும் நினைப்பார். விவரம் தெரியாமல் கம்ப்யூட்டரை டைப்ரைட்டர்போல் நினைத்து டைப் அடிக்க ஆரம்பித்தால் எழுத்து டைப்ரைட்டரில் விழுவதுபோல் விழும். ஏதாவது கை தவறி வேறு பட்டனில் கைபட்டுவிட்டல், ஸ்கிரீனில் டைப் செய்த அவ்வளவும் அழிந்துபோகும். அல்லது கம்ப்யூட்டருக்குரிய டிக்ஷனரி பக்கம் ஸ்கிரீனில் வரும். சமயத்தில் கம்ப்யூட்டருள் என்ன நடக்கிறது என்று நமக்குத் தெரியாது. **ஏதேதோ நடக்கும்**.

சூட்சும உலகம் ஒருவகையில் கம்ப்யூட்டரைப் போன்றது. நாம் அனுபவமில்லாமல் கம்ப்யூட்டரை உபயோகப்படுத்தும்பொழுது கம்ப்யூட்டர் என்ன ஆகிறது என நாம் அறிவதில்லை.



பகவான் ஸ்ரீ அரவிந்தர் சம்பந்தப்பட்ட அத்தனை விஷயங்களும் கம்ப்யூட்டரைப் போன்றவை. அவர் எழுதியவை பிரம்மாஸ்திரம் போன்றவை. அதை ஆங்கில அறிவு மட்டும் உள்ளவர் புரிந்துகொள்வது கடினம். திருத்த முயல்வது elephant என்பது ஒருவரை ant என்பது போலாகும். Ant என்பதே இரண்டிற்கும் பொது, eleph என்பதுதான் மாற்றம் என்று பேசுபவரின் தர்க்கம் போலாகும்.

- **நாம் ஸ்ரீ அரவிந்தரை மகான், ரிஷி என நினைக்கிறோம்.**
- **மேல் நாட்டவர் அவரை அறிஞர் என்கின்றனர்.**
- **தேசபக்தர்கள் பகவான் ஸ்ரீ அரவிந்தரைச் சுதந்திரப் போராட்டத் தலைவர் என்கிறார்கள்.**
- **அன்று பிரிட்டிஷ் சர்க்கார் அவரை political refugee பிரான்ஸ் நாட்டின் பகுதியில் தஞ்சம் புகுந்த அரசியல் அகதியாகக் கருதினர்.**
- **ஸ்ரீ அரவிந்தர் அரசியல் தலைவரோ, அறிஞரோ, மகானோ, ரிஷியோயில்லை.**

**அவர் பேசும்பொழுது சத்தம் தரையில் பட்டால் பட்ட இடம் சத்தியஜீவியமாக மாறிற்று என்றார் அன்னை.**

இது உலகுக்கு இறைவன் வரும் தருணம் என அறிவிக்க வந்த இறைவனின் பகுதி என அன்னை கூறுகிறார்.

☆ ☆ ☆

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மாறுவது அவ்வளவு கடினமன்று. எங்கு மாறவேண்டும், மாறவேண்டியது எது, என்று தெரியவே நாளாகிறது.

*மாறுவதைவிட மாறும் நிலை சிரமம்.*

## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

தம்பி - இந்தக் கதை - Pride & Prejudiceஇல் - நாம் தெரிந்துகொள்ளக் கூடியவை மேலும் இருந்தால் சொல்லுங்கள்.

அண்ணன் - நாம் எப்படி அருளை விலக்குகிறோம். அருள் வரும்பொழுது பராமுகமாக இருக்கிறோம் என்று அறிய இரண்டாம் பெண் எலிசபெத்தை நோக்கி, கர்வி டார்சி அருளாக வருவதாகப் பார்த்தால் தெரியும்.

தம்பி - நான் சொல்கிறேன். எனக்குத் தெரியும்.

முதன்முதலாக

1) டார்சி எலிசபெத்தை நோக்கி வந்தது, "அவள் அழகியில்லை" என்று டான்ஸில் சொல்லியது, எலிசபெத் காதில் அது விழுந்தது. அவளுக்கு அது அருளாகத் தெரியவில்லை. தெரிய முடியாது. அனைவரிடமும் அதைக் கூறிச் சிரிக்கிறாள்.

அண்ணன் - வரும் அருள் எலிசபெத்தைக் கேலி செய்ய வைக்கிறது.

தம்பி - 2) டார்சி மனம் மாறி, நேரடியாக அவளிடம் வந்து டான்ஸ் ஆடும்படிக் கேட்கிறான். இது நேரடியாக அருள் அவளை நாடி வருவதாகும்.

அண்ணன் - அருள் வந்தாலும், ஏற்கனவே அழகியில்லை என்று கேட்டதே நினைவிருப்பதால் டான்ஸ் ஆட மறுக்கிறாள்.

தம்பி - அருளை நேரடியாக எலிசபெத் மறுக்கிறாள்.

3) சார்லேட் என்பவள் எலிசபெத்திடம் வந்து டார்சி உன்னையே பார்க்கிறான். அவனுக்கு உன் மேல் ஆசை. அழகன் விக்காம் நினைவில் டார்சியை அலட்சியம் செய்யாதே. இது பெரியது என்கிறாள். அருளை வாழ்வு எலிசபெத்திற்கு எடுத்துக் கூறுகிறது. காதில் ஏறவில்லை.

அண்ணன் - டார்சியாக அருள் எலிசபெத்தை நோக்கி வரும் பொழுது எலிசபெத் தறுதலை அழகனை மனத்தால் நாடுகிறாள். மனம் அருளிலிருந்து விலகி மருளை விரும்புகிறது.

தம்பி - 4) எலிசபெத் டார்சியான அருளை விட்டு கண்மூடித்தனமாக விலகுவதால் என்ன வருகிறது? அருவருப்பான காலின்ஸ் வருகிறது. அதையும் மறுக்கிறாள். டார்சியை அருளாகக் காண முடியாதவள், காலின்ஸை எப்படி அருளாகக் காண முடியும்?

அண்ணன் - காலின்ஸ் எலிசபெத்திற்கு அருள், தத்துவரீதியாக எல்லாமே அருள்தானே. காலின்ஸ் எலிசபெத்தை மறுத்ததால், சார்லேட்டைத் திருமணம் செய்துகொண்டு, ஹன்ஸ் போர்ட் - சார்லேட் வீட்டிற்கு எலிசபெத்தை அழைத்துப் போகிறார்கள். டார்சியும், எலிசபெத்தும் அங்கே சந்திக்கிறார்கள்.

தம்பி - 5) எலிசபெத் - proposalஐ - அருளைத் திட்டுகிறாள். அருள் அவள் கண்ணுக்குத் தெரியவில்லை. ஜேன் திருமணம் கெட்டுப் போனது தெரிகிறது. விக்காம் சொன்ன பொய்க் கதைகள் தெரிகின்றன. Proposal அருளாகத் தெரியவில்லை. அருளான proposal எரிச்சலாகத் தெரிகிறது.

6) டார்சிக் கடிதத்தைப் பார்த்து தன் குடும்ப நிலையை அறிந்து வெட்கப்பட்டு மனம் புழுங்கி மாறுகிறாள்.

அண்ணன் - இந்த மனமாற்றமே முதலில் டார்சியைத் திருமணம் செய்துகொள்ளச் செய்கிறது. மனமாற்றமில்லாமல், கதை வேறுவகையாக முடிந்திருக்கும். மனம் மாறிய

பின் பெம்பர்லியை எலிசபெத் பார்த்துச் சந்தோஷப்பட்டு, ‘‘இந்த இடத்து எஜமானியாகியிருக்கலாம்’’ என்று தோன்றுகிறது.

தம்பி – டார்சி தனக்கு இல்லை என்பதால் எலிசபெத் கோபமாகவும், பராமுகமாகவுமிருந்தாள் என்பதும் உண்மை.

அண்ணன் – கிடைக்காது, எட்டாது என்பதால் வேண்டாம் என்ற மனநிலை அது. Proposal வந்த பின் பெம்பர்லியைப் பார்த்த பின் எலிசபெத் மனம் மாறுகிறாள்.

தம்பி – அவள் மனம் மாறிய அதே நேரம் டார்சியைப் பெம்பர்லிக்கு வெளியே சந்திக்கின்றாள்.

அண்ணன் – Life responseக்கு நேரம் தேவையில்லை. உடனே நடைபெறும் என்கிறோம்.

தம்பி – எலிசபெத் மனம் மாறுகிறாள். டார்சியைச் சந்திக்கின்றாள். தங்கை ஜார்ஜியானாவை அறிமுகம் செய்கிறான். ‘‘நமக்கு டார்சி உண்டு’’ என்று அவளுக்குத் தோன்றும்பொழுது லிடியா ஓடிப்போன செய்தி ஏன் வருகிறது?

அண்ணன் – டார்சி, எலிசபெத் உறவு சுமுகமானதானால், இந்தக் குறை வந்திருக்காது. அவள் மனம் மாறிவிட்டாள். இதுவரை அவளை வெறுத்தது, கோபமாகத் திட்டியது, டார்சிக்கு எதிரான விக்காம் நல்லவன் எனப் பாராட்டியவை வெடித்து ஓடிப்போன செய்தி வருகிறது.

தம்பி – லிடியா ஓடிவிட்டாள் என்றவுடன் எலிசபெத் டார்சியை மறந்துவிடுகிறாள். ஏற்கனவே டார்சி எலிசபெத் குடும்பத்தை மட்டமாக நினைக்கிறான். இந்தச் செய்தி வந்தபின் டார்சியை மறப்பது அவசியமல்லவா?



அண்ணன் – அது உண்மைதான். மேலும் ஒரு விஷயம் உள்ளது. டார்சி நமக்கில்லை என்று அவள் தீர்மானமாக நினைத்தால், லிடியா விஷயத்தை டார்சியிடம் சொல்லியிருக்கமாட்டாள். உள்ளூர எலிசபெத் உணர்வு வேறு. அது ‘‘டார்சிக்கும் எனக்கும் உள்ள உறவு ஆழ்ந்தது. அது லிடியாவால் அறுந்து போகக்கூடியதன்று, உள்ளதை டார்சியிடம் கூறுவது உறவை வலுப்படுத்தும்’’ என்ற தன்னையறியாத ஆழ்ந்த அறிவு (subconscious understanding) இருப்பதால் உண்மையை அவனிடம் கூறுகிறாள்.

தம்பி – பின்னால் நடந்தவற்றைக் கவனிக்கும்பொழுது நீங்கள் கூறியது சரியெனப்படுகிறதே.

அண்ணன் – வலிய வந்த அருளைத் திட்டி அனுப்பிவிட்டு, இப்பொழுது மறைமுகமாக அதைத் திரும்பப் பெறும் முயற்சியிது.

தம்பி – இப்பொழுது எலிசபெத்திற்கு நன்றியறிதல் தோன்றுகிறது. அருள் முடிவில் பலன் தர இந்த நன்றியறிதல் வித்து.

அண்ணன் – ஏதாவது ஒரு ரூபத்தில் அந்த நன்றியறிதல் இல்லாமல் அருள் செயல்படாதா?

தம்பி – நாம் அருளைப் பெற இந்த நன்றியறிதல் அவசியம். அருளே நம்மை வந்தடைய முயலும்பொழுது இந்த நன்றியறிதலுமின்றிச் செயல்படும்.

அண்ணன் – பெற்றவர் நன்றி தெரிவிக்காவிட்டால், பெற்றவர் சூழ்நிலை அந்த நன்றியைத் தெரிவிக்கும்.

தம்பி – கடைசிப் பெண் லிடியா திருமணமாகி நியூகேசல் போனபின் டார்சி வந்தபொழுது எலிசபெத்திடம் பேசவில்லை என்பதால், ‘‘ஏன் இங்கே வரவேண்டும், இனி வரவேண்டாம்’’ என எலிசபெத் நினைக்கிறாள்.

அண்ணன் - மறுநாள் டார்சி மீண்டும் proposal தர இருக்கும்பொழுது எலிசபெத் டார்சி இனி வரவேண்டாம் என நினைப்பது நாமெல்லாம் அருளை வரவேற்பது போலிருக்கிறதே!

தம்பி - அதுவே அருளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவின் முத்திரை.

அண்ணன் - கடைசிவரை அருள் செயல்படுவதை மனிதன் முயன்று தடை செய்வதற்கு இது நல்ல உதாரணம். அருள் எலிசபெத்தை வந்தடைய பட்டபாடு பெரியது. **கேலி, மறுப்பு, எதிரியை நாடுவது, கோபம், வெட்கம், விருப்பம், ஆபத்து, கிராக்கி மூலம் அருள் வந்து சேர்கிறது.**

தம்பி - நம் அனுபவம் போலவேயிருக்கிறது எலிசபெத்தின் அனுபவம். முதலில் முயன்று விலகிப் போகிறாள். பிறகு கோபப்படுகிறாள். அறிவு வந்து வெட்கப்பட்டு விரும்பிய பிறகு ஆபத்துதான் வருகிறது. அதன் பிறகும் பெற்றுக்கொள்ள கிராக்கி போகவில்லை. நாம் பொதுவாகச் செய்வனவெல்லாம் கதையில் வருகின்றன.

அண்ணன் - எதைக் கூறுகிறாய்?

தம்பி - 1) உள்ளதை மறைத்து, திருப்பி, அதன் மேலே கட்டடம் எழுப்பி நம் மரியாதையைக் காப்பாற்ற முயல்கிறோம்.

2) முக்கியமானவரிடம் முக்கியமான விஷயத்தை மறைத்து, நம் காரியத்தைச் சாதிக்க நினைக்கிறோம்.

3) தானே நடக்கட்டும் என்ற பொறுமையில்லாமல் நாமே அவசரப்பட்டு ஆரம்பிக்கின்றோம்.

4) மனத்தை மாற்றாமல், பிரார்த்தனையைத் தீவிரமாக்கினால் பலிக்கும் என நினைக்கிறோம்.

5) நல்லதை மறுத்தால், கெட்டது வரும்.



6) டார்சியைச் சீண்டினால், காலின்ஸ் வந்து "உன்னை யாரும் மணக்க முன்வரமாட்டார்கள்" என்பான்.

7) கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்க மறுத்தால், பிறகு லிடியாவுக்கும் விக்காமுக்கும் கொடுக்க வேண்டி வரும்.

அண்ணன் - ஜேன் இனிமையானவள் என்பது மட்டும் உண்மையன்று. தாயாரும், மாமாவும் தாழ்ந்தவர்கள், கடைசிப் பெண்கள் ஆபீசர்களைத் தேடி ஓடுகிறார்கள் என்பதை எலிசபெத் அறியவில்லை. அதை மறந்து ஜேனுக்குப் பிங்லி அமையவேண்டும் என உருகினாள். ஜேன் விஷயம் முடியவில்லை. லிடியாவின் சாயம் வெளுக்கிறது.

தம்பி - நம் வாழ்வில் ஆதி நாட்களை நினைத்துப் பார்த்தால் குறைகளை மறைப்பது மட்டுமன்று, குறைகளை நிறைவாக மாற்றப் பெருமுயற்சி செய்கிறோம். இன்றுள்ள கட்டடம் அப்படி எழுப்பப்பட்டதே என அறிவோம்.

அண்ணன் - அந்த உண்மை வெளிவாராமல் அதிர்ஷ்டம் வாராது.

தம்பி - நாமாக அதைக் கடந்த காலச் சமர்ப்பணத்தில் கரைக்காவிட்டால் ஒன்று அதிர்ஷ்டம் வாராது அல்லது விபரீதமாக வெடித்து விஷயம் வெளிவரும். அதுதானே ஜேன் குடும்பத்தில் நடக்கிறது.

அண்ணன் - பிங்லி, ஜேனை மணக்க வேண்டும் எனில் தங்கள் தாழ்ந்த நிலையை மனதால் முதலிலேயே உணர்ந்து அடங்கியிருக்கவேண்டும். அப்படிச் செய்யாததால், தானே வெளியாயிற்று.

தம்பி - லிடியாவைக் காப்பாற்ற பென்னட் குடும்பத்தால் முடியாது. அவளைக் கண்டுபிடிக்கும் வசதியில்லை.

கார்டினருக்கு விக்காம் கட்டுப்படமாட்டான். பெரும் பணம் கொடுக்கும் வசதியுமில்லை. டார்சிக்கு விக்காம் உள்ள இடங்கள் தெரியும். டார்சியை அவனால் மீற முடியாது. கடன், கல்யாணம், கமிஷன் ஆகியவற்றிற்குப் பெரும்பணம் கொடுத்தது டார்சி. லிடியாவுக்கு கல்யாணமாயிற்று என அறிந்தவுடன், டார்சியால் நடந்தது எனத் தெரியாமல், "அடடா, டார்சியிடம் ஓடிப்போனதை மறைத்திருக்கலாமல்லவா?" என்று எலிசபெத் நினைக்கிறாள்.

அண்ணன் - **யாருக்கு முக்கியமாகச் சொல்ல வேண்டுமோ, அவர்களிடமே மறைப்பது, மறைக்க முயல்வதே நம் பழக்கம்.**

இது நம் சாதாரண மனநிலை. இன்று நமக்குத் தீராத பிரச்சினைகளை நினைத்துப் பார்த்தால், இப்படி மறைத்ததால் எழுந்த பிரச்சினையுமிருக்கும். சொல்ல வேண்டியவர்கட்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லாமலிருப்பது நம் பழக்கம்.

கணவன் மனைவியிடம் மறைப்பான்.

குழந்தை பெற்றோரிடம் மறைக்கும்.

தம்பி - இந்தப் பழக்கமில்லாத குடும்பங்கள் குறைவு.

**உள்ளதை மறைப்பது பொய்.** அதைச் செய்தபின் பிரார்த்தனை பலிக்காது. பிங்லி முதலில் தங்கள் ஊருக்கு வந்தவுடன் எலிசபெத்தின் தாயார் கணவனைப் பிங்லியிடம் அனுப்புகிறாள். இது அவள் initiative, வரட்டும் என்றில்லாமல், அவசரப்படுகிறாள். கணவனைப் பிடித்துத் தள்ளி பிங்லி வீட்டுக்கு அனுப்புகிறாள்.



அண்ணன் - என்ன நடந்தது? இனிமேல் இருக்கக்கூடாது என பிங்லி முடிவு செய்து இடத்தைக் காலி செய்துவிட்டான்.

தம்பி - இரண்டாம் முறை பிங்லி வந்தபொழுது பென்னட் போக மறுத்துவிடுகிறார். டார்சியும், பிங்லியும் தாமே வருகிறார்கள்.

அண்ணன் - இரண்டொரு நாளில் இரண்டு கல்யாணங்களும் முடிகின்றன. நாமெல்லாம் Mrs. பென்னட்போல் நடக்கிறோம். ஏன் காரியம் கூடி வரவில்லை என அடித்துக்கொள்கிறோம்.

தம்பி - எதை நாம் ஆரம்பிக்க வேண்டுமோ, அதைத் தவறாது ஆரம்பிக்க வேண்டும். எதை ஆரம்பிக்கக்கூடாதோ, அதை ஆரம்பிக்கவே கூடாது.

அண்ணன் - இப்படிச் செய்தால் பாக்கியான பிரச்சினைகள் தாமே தீருமே.

தம்பி - இது நாம் பிரச்சினை உற்பத்தி செய்யும் வழியாயிற்றே!

அண்ணன் - பிரார்த்தனை பலிக்கிறதைப் பார்த்தபொழுது, எல்லாப் பிரார்த்தனைகளும் பலிக்கும். நாமெப்படியிருந்தாலும், பிரார்த்தனையால் மட்டுமே பலிக்கும் என நினைக்கிறோம், தீவிரமாகப் பிரார்த்திக்கிறோம்.

தம்பி - மனம் மாற வேண்டிய இடத்தில், மனத்தை மாற்றாமல் தீவிரமாகப் பிரார்த்திக்கவே முடியாது. கடனை வருமானமாகக் கருதி அளவுகடந்து வாங்கிவிட்டு, தவற்றை உணராமல், பிரார்த்தனை பலிக்கவில்லை என்று பலர் கூறுகிறார்கள்.

அண்ணன் - எலிசபெத் தன் குடும்பம் மட்டம், தான் செய்தது தவறு என்று உணர்ந்த பிறகுதான் விஷயம் மாற ஆரம்பித்தது. அப்படி நினைத்தபிறகுதான் பெம்பர்லிக்கு அழைப்பு வந்தது.

தம்பி - கதை இந்த விஷயத்தை நன்றாகச் சொல்லாமல் எடுத்துக்காட்டுகிறது. பிங்லியின் தங்கை எலிசபெத்தைப் பற்றி குறை சொல்வதால் டார்சி மனம் மாறும் என நினைக்கிறாள்.

அண்ணன் - ஒவ்வொரு முறை அவள் குத்தலாகக் கேலியாகப் பேசுவதால் விஷயம் தலைகீழே போய், முடிவாக அவள் டார்சியை இழக்கிறாள்.

தம்பி - பல சமயங்களில் நாமென்ன நினைக்கிறோம், ''சொன்னால்தானே தெரியும். சொல்வது அவசியமல்லவா?'' என்று நினைக்கிறோம்.

அண்ணன் - அப்படிச் செய்தவற்றின் பலன் என்ன என்று நினைத்துப் பார்த்தால் தெரியும். ஒரு விஷயம்கூட நிறைவேறியிருக்காது.

தம்பி - நிறைவேறியிருக்காது என்பதுடன் எதிரான பலன் வந்திருக்கும்.

அண்ணன் - கதையில் அப்படித்தானே நடக்கிறது.

தம்பி - பிங்லியின் தங்கை, மனதை மாற்றிக்கொண்டு எலிசபெத்திடம், டார்சி திருமணத்திற்குப்பின், இரட்டிப்பு மரியாதையுடன் நடந்தாள்.

அண்ணன் - டார்சி அத்தனை டான்ஸ்களில் யாருடனும் ஆடவில்லை. எலிசபெத்தைக் கேட்கிறான். ஒருமுறை பதில் சொல்லத் தெரியாமல் ஏற்றுக்கொள்கிறாள். அடுத்த முறை மறுத்துவிடுகிறாள். டார்சி உண்மையானவன், நல்லவன், உயர்ந்தவன். அவனுடன் டான்ஸ் ஆட மறுத்ததன் பலன் என்ன?

தம்பி - காலின்ஸ் proposal தருகிறான். அருவருப்பான மனிதன். நல்லதை மறுத்தால், அசிங்கம் வருகிறது. அத்துடன், ''யாரும் உன்னைக் கட்டிக்கொள்ள மாட்டார்கள்'' என்றும் கூறுகிறான்.



அண்ணன் - கடமையை ஏற்று, அதை நிறைவேற்றுபவர்கள் இல்லை. பிரியத்திற்காகச் செய்வார்கள். டார்சி எஸ்டேட் நிர்வாகத்தில் உயர்ந்த முறையில் நடந்திருந்தால், விக்காமுக்கும், லிடியாவுக்கும் கொடுக்க வேண்டியிருந்திருக்காது. லிடியா மட்டம் என்று எலிசபெத்திடம் சொல்லியிருக்க வேண்டியதில்லை. டார்சிக்குப் பிடிக்காவிட்டால் proposal தரவேண்டாம். ''நீ மட்டம், உன் தங்கை மட்டம்'' என்று கூறி, "இருந்தாலும் நான் உன்னை மணக்க விரும்புகிறேன்" என்று கூற வேண்டிய அவசியமில்லை.

தம்பி - யாரை அவசியமில்லாமல் மட்டம் என்று டார்சி கூறினாரோ, அவள் செலவை டார்சி செய்ய வேண்டியதாயிற்று.

அண்ணன் - சொன்னது அவசியமில்லை, அதேபோல் லிடியாவுக்கு நிர்ப்பந்தமில்லாமல் தானே செய்ய வேண்டியதாயிற்று.

தம்பி - இதையே truism of life வாழ்வின் சட்டம் என்று கூறுகிறோம். நல்லெண்ணத்தின் சக்தியைக் கதை நன்றாக வெளிப்படுத்துகிறது.

**நல்லெண்ணம்**

அண்ணன் - அன்னை நல்லெண்ணத்தின் மூலம் அபரிமிதமாகச் செயல்படுவதை நாம் அறிவோம். இந்தக் கதையில் சார்லேட்டிற்குள்ள நல்லெண்ணம் பெரியது.

தம்பி - எலிசபெத்திற்கும் பொதுவாக நல்லெண்ணமுண்டு. சார்லேட்டிடம் குறிப்பாக நல்லெண்ணம் உண்டு.

அண்ணன் - அதுதான் சார்லேட்டிற்கு £2000 எஸ்டேட் கிடைத்தது.

| | |
|---|---|
| தம்பி | - சார்லேட்டின் நல்லெண்ணம் £10000 எலிசபெத்திற்கு வந்தது. |

சார்லேட்டின் நல்லெண்ணம் உயர்ந்தது. தனக்குத் திருமணமாகாதபொழுது எலிசபெத்திற்கு டார்சி வேண்டும் என நினைப்பது நல்லெண்ணம் மட்டுமன்று, உயர்ந்த நல்லெண்ணம்.

| | |
|---|---|
| அண்ணன் | - இது பிறர் வாழப் பொறுக்காத உலகம். எனக்கு 50 கோடியிருந்தாலும் உனக்கு ரூ. 20,000 வர என் மனம் தாங்காது. என்னால் முடிந்தால் தடுப்பேன் என்பதே இவ்வுலகம். இந்த உலகில், |

**எனக்கு எதுவுமில்லாதபொழுது உனக்கு**
**எல்லாம் வரவேண்டும் என்று விரும்பும்**

சார்லேட் மனம் உயர்ந்தது, உன்னதமானது.

*தொடரும்.....*

☆ ☆ ☆

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சரணாகதியை, பகவான் கண்டுபிடித்ததை அன்னை பிரமாதமானது என்கிறார். எம்முறைக்கும் மனிதத் திறமையுண்டு. ஆன்மாவும், பிரகிருதியும் அர்ப்பணத்தின் மூலம் சரணடைந்தால், மனிதத் திறமை வெளிப்பட வழியில்லை. மனிதத் திறமை மறைந்த நேரம் இறைசக்தி வெளிப்படுகிறது. எனவே, அதுவே மிகக் குறுகிய வழி.

*சரணாகதியில் வெளிப்படுவது இறைவன்.*





## யார் சாதகர்?

இல. சுந்தரி

அப்பாவின் மரணத்திற்குப் பிறகு இருந்த ஓர் ஆதரவும் போய்விட்டது. இரண்டாந்தாரமாய் வந்த இந்தச் சித்தியைத் தன்னை வளர்ப்பதற்காகவே மணந்ததாக ஊருக்கெல்லாம் சொல்லுவார் அப்பா. ஆனால் இவள் வந்த இந்தப் பத்து ஆண்டுகளில் இவன் அப்பாவை அவள் ஏவல் கொண்டதையும், இவனை உதாசீனப்படுத்தியதையும் ஊரே அறியும். இருப்பினும் அப்பாவுக்கு இவன்மீது பாசம் உண்டு. சித்திக்குத் தெரியாமல் பள்ளிக்கூடம் விட்டு வரும் வழியில் தின்பண்டம் வாங்கித் தருவார். சித்தி இவனைக் கடுமொழிகளால் பேசும்போது அவளறியாமல் சின்னச்சின்ன ஆறுதல் மொழிகள் கூறுவார். மற்றபடி இவன் அப்பாவும் சித்தியும் சேர்ந்து இவனை எங்கும் அழைத்துச் சென்றதோ அன்புடன் கொஞ்சியதோ கிடையாது. பசியறிந்து உணவூட்டியதில்லை. பண்பறிந்து பாராட்டியதில்லை. அப்பாவின் மறைவிற்குப் பிறகோ அந்தப் பாசமும் இல்லாது போயிற்று.

பதினாறு வயதை எட்டிக்கொண்டிருக்கும் சிறுவனும், இளைஞனுமில்லாத பருவம். அன்பும், ஆதரவும் தேவைப்படும் பருவம். ஐந்து வயதுவரை இவனையீன்ற தாய் உயிரோடிருந்தாள். 'மாணிக்கம்' என்று பெயரிட்டு வாய்நிறைய அழைத்து மனம் நிறையக் கொஞ்சுவாள். அந்த அம்மாவின் அன்பை இனி எங்கே பெறமுடியும்? ஆனால் இறைவன் இவனுக்கு அன்பின் உண்மை வடிவைக் காட்ட விரும்பியிருந்தால் அதை யாரால் தடை செய்யக்கூடும்?

இவன் தந்தை சொத்துக்களைச் சித்தியின் பொறுப்பில் விட்டிருந்தார். நாளையே இவன் மேஜராகி உரிமையாளனாகிவிட்டால்

இவன் சித்தி அதைத் தாங்காது இவனைக் கொல்லவும்கூடும் என்று ஊரார் பேசிக்கொண்டதை இவனும் கேட்க நேர்ந்தது. சித்தியின் கையில் சிறுமைபட்டுச் சாவதைவிட உண்மை அன்பைக் கண்டுபிடித்து அதன் நிழலில் சுதந்திரமாய் வாழ முடிவு செய்தான். சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறினான் சிறுவன்.

எங்கு செல்வது என்று இலக்கு ஏதும் இல்லாமல் சென்றான். மூட்டைத் தூக்கினான். டீக்கடையில் டேபிள் துடைத்தான். கிடைத்த வேலையைச் செய்து கிடைப்பதை உண்டு, எந்த வீட்டுத் திண்ணையிலாவது உறங்கி காலம் போக்கினான். நிரந்தரமான வேலையொன்றுமில்லை. எங்கு உண்மையான அன்பைக் கண்டுகொள்வானோ அங்குத் தங்கிவிட எண்ணினான். ஆனால் இறந்துபோன மனைவியை மறக்க இரண்டாந்தாரம் முடிக்கும் அப்பாக்கள், பெற்றவர்க்கு அன்பு செய்யாத பிள்ளைகள், 'சொந்தம்' என்ற சொல்லுக்குரியவர் யாவர் என்றறியாத உறவுகள் பார்த்துப் பார்த்து அலுத்துப்போனான். அன்பு என்ற அகண்ட பொருளைக் குறுகிய கண்ணோட்டத்தில் காணும் சிறுமைகளைக் கண்டு சினந்தான். உண்மை எது? மனிதன் எதை நாடவேண்டும்? எதை நாடிப் போகிறான்? என்ற தேடலில் இறங்கினான்.

ஓரளவு படிப்பறிவு இருந்தும் வேலையில் சேருமளவு தகுதியில்லாதிருந்தான். கூலி வேலை செய்வதே எளிதாயிருந்தது. நன்றியுள்ள மனிதர்களைச் சந்தித்தபோதெல்லாம் மகிழ்ந்தான். தன் உழைப்பைத் தின்று வளரும் வெற்றர்களைக் கண்டு நொந்தான். வீட்டைவிட்டு வந்த ஓரிரு மாதங்களில் எத்தனை அனுபவங்கள்?

நேர்மையானவர்க்கே இனி உழைக்கவேண்டும் என்று சங்கல்பம் கொண்டான். ஒருநாள் இவன் வேலையேதுமின்றியிருந்தபோது ஒரு கார் ரோட்டின் ஓரம் நின்றது. அதில் பயணம் செய்தவர்களில் ஒருவர் நோயாளி போலும். அவரைக் கீழே இறக்கவேண்டிய நிலையில் உதவி



எதிர்பார்த்து குடும்பத் தலைவர் பார்வையை ஓடவிட்டபோது சிறுவன் மாணிக்கம் கண்ணில்படவே அவனை உதவிக்கு அழைத்தார். ஓடிவந்தான் சிறுவன். நோயாளியை கீழே இறக்கவும், மீண்டும் காரில் அமர்த்தவும் உதவினான். ஒரு தொகையை நன்றியாகக் கொடுத்தபோது வாங்க மறுத்துவிட்டான். இது மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமை. இதற்குக் கூலி எதற்கு என்றான் சிறுவன். குடும்பத் தலைவர் அசந்துபோனார். பெற்றோர்கள் பிள்ளைக்கு உணவிடவும், பிள்ளைகள் பெற்றோர்க்கு உணவு இடவும் கணக்குப் போட்டுப் பார்க்கும்போது கடமை என்று கூறிய இவன் சொல் இனித்தது. இவனை யார் என்று வினவ தன் சோகக் கதையைச் சோகமின்றிச் சொல்லிவிட்டு உண்மையான அன்பைத் தேடுகிறேன் என்றான். அப்போது குடும்பத் தலைவர் கூறினார், "நாங்கள் புதுவைக்குப் போகிறோம். அங்கு ஸ்ரீ அன்னை இருக்கிறார். அவர் அகில உலகிற்கும் அன்னையாகிய பராசக்தியின் அவதாரம். அவரைத் தரிசிக்கவே நாங்கள் போகிறோம். நீ விரும்பினால் உன்னைப் புதுவைக்கு அழைத்துப் போகிறேன். ஸ்ரீ அன்னையைத் தரிசித்தால் நீ தேடிய அன்பை அடைய முடியும்" என்றார்.

ஏதோ ஒரு பற்றுக்கோடு, ஒரு இலக்கு கிடைப்பதை உணர்கிறான். ஆர்வமுடன் அவர்களுடன் சென்றான். அந்தத் தரிசன நாள் அவன் வாழ்வின் பொன்னான நாள். அவன் இலக்கை அவன் கண்டுபிடித்த நாள். தரிசனத்திற்காக மக்கள் வரிசையில் அழகாக ஆர்வமாக நின்றிருந்தனர். இவனையும் அவர்கள் வரிசையில் செலுத்தினர். அந்த திவ்ய தரிசனத்தை என்னென்று கூறுவான்.

*தொடரும்.....*

☆ ☆ ☆

## அறிவிப்பு

**இவ்வட்டத்திற்குள் ◎ இக்குறி ✓ இருந்தால் உங்கள் சந்தா முடிவடைந்துவிட்டது. உடனடியாக புதுப்பிக்கவும்.**

## சொசைட்டியின் வெளியீடுகள்

கர்மயோகியின் நூல்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பிரார்த்தனையும் சமர்ப்பணமும் | ரூ. 20 |
| 2. | மனம் - ஜீவனின் முக்கியக் கரணம் | ரூ. 20 |
| 3. | சமூகம் அதிர்ஷ்ட சாகரம் | ரூ. 20 |
| 4. | சிறியதும் பெரியதும் | ரூ. 20 |
| 5. | கணவன் மனைவி | ரூ. 20 |
| 6. | இரத்தினச் சுருக்கம் | ரூ. 20 |
| 7. | ஸ்ரீ அரவிந்தம் - தத்துவம் | ரூ. 50 |
| 8. | ஸ்ரீ அன்னை பராசக்தியின் அவதாரம் | ரூ.100 |
| 9. | அதிர்ஷ்டம் | ரூ.100 |
| 10. | பேரொளியாகும் உள்ளொளி | ரூ.100 |
| 11. | பிரார்த்தனை பலிக்க வேண்டும் | ரூ.100 |
| 12. | பரமனை நாடும் ஜீவாத்மா | ரூ. 20 |
| 13. | ஸ்வரூபம் சுபாவம் | ரூ. 20 |
| 14. | யோக வாழ்க்கை விளக்கம் - I | ரூ. 80 |
| 15. | ஸ்ரீ அரவிந்தரின் காவிய இதழ்கள் | ரூ. 60 |
| 16. | நூறு பேர்கள் (2 பாகங்கள் சேர்ந்தது) | ரூ.150 |
| 17. | வாழ்வின் அடிச்சுவடுகள் | ரூ. 60 |
| 18. | அன்னையின் வாழ்வில் | ரூ. 80 |
| 19. | அபரிமிதமான செல்வம் | ரூ. 50 |

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்.

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: Karmayogi

## பாங்க் பணத்தை உற்பத்தி செய்கிறது

ஒருவர் இலட்சரூபாய்க்கு உற்பத்தி செய்து அப்பணத்தை பாங்கில் போட்டால் அது சமூகத்தில் 15 இலட்ச செலாவணியாகிறது என்பது பொருளாதாரக் கணக்கு.

நிலம் ஒரு விதையை 100 விதையாகப் பெருக்குவதுபோல் சமூகம் இலட்சரூபாயை 15 இலட்சமாக்குகிறது. உடல் உழைப்பால் நிலம் உற்பத்தி செய்கிறது. உணர்வின் நம்பிக்கையால் ஊர் பணத்தைப் பெருக்குகிறது. உடலையும், உணர்வையும் கடந்த நிலையில் மனம் பணத்தை ஸ்தாபனமாக்குகிறது (organisation). ஸ்தாபனம் இலட்சத்தை ஒரு கோடியாகவும், 10 கோடியாகவும் மாற்றவல்லது. முதல் 5 ஐந்தாண்டு திட்டங்களில் செலவான கோடிகளைத் தலைக்கு ஒரு நாளைக்கு 75 பைசா என ஒருவர் கணக்கிட்டார். இந்தச் சிறு துளி அந்தப் பெருவெள்ளமானது பணம் என்ற ஸ்தாபனத்தால். மனத்தைக் கடந்தது ஆன்மீகம். ஆன்மாவின் திறன் மனத்தைவிட அதிகம். ஆன்மா என்பது பண்பு. அன்னை ஆன்மாவைக் கடந்தவர்

- சமூகம் உற்பத்தியைப் பெருக்க உதவும்.
- சமூகத்தில் பாங்க் பணத்தைப் பலமடங்கு பெருக்கும்.
- மனம் என்பது ஸ்தாபனம். பணத்தை மனத்தூய்மை பாங்கை விட அதிகமாகப் பெருக்கும்.
- ஆன்மா மனத்தைக் கடந்தது. ஆன்மா வாழ்வில் பண்பாக வெளிப்படுகிறது.
- எளிய மனிதன் உழைப்பால் உற்பத்தியை அதிகபட்சமாக்கிய பின், மனத்தால் பணம் என்ற ஸ்தாபனத்தை பாங்க், சர்க்கார், தொழில் இன்ஷூரன்ஸ் மூலம் பயன்படுத்தினால், அவன் ஆன்மா பண்பாக - நாணயம், நல்லெண்ணம் போன்றவை - வாழ்வில் வெளிப்படுமானால் முதல் நிலையில் ஆயிரம், பல ஆயிரமாகவும், அடுத்த நிலையில் இலட்சமாகவும், அவன் நேர்மையான உழைப்புக்கு பலனாக இலட்சம் கோடியாகவும் பெருகுகிறது என்பது உலகம் இதுவரை அனுபவத்தால் கண்ட உண்மை. அன்னை அதையும் கடந்தவர். அவரை அறிவது அதிர்ஷ்டம், பின்பற்றுவது அருள், அவருள் நாம் கரைவது பேரருள்.

★ ★ ★

# B.P., Sugar
## சர்க்கரையின் அளவு

அன்று எந்த வியாதி வந்தால் வாழ்வு முடியுமோ, அந்த வியாதிக்கு இன்று மருந்து வந்துள்ளது. ஆப்பரேஷன் வந்திருக்கிறது. பெரிய ஆப்பரேஷன், சிறியதாக மாறியுள்ளது. எவ்வளவு வசதி வந்தாலும், அது ஏழைக்கு அன்று என்ற விதி என்றும் செல்லும். ஏழைக்கும் தர்ம வைத்தியம் பல சமயம் கிடைக்கும். மருத்துவமிருந்தாலும், பணவசதியிருந்தாலும் வேறு பல காரணங்களால் உள்ளதை அனுபவிக்க முடியாத பொழுது மனிதன்,

**'கர்மம் அனுபவிக்க வேண்டியதாயிற்றே'** என்று முடிவு செய்கிறான்.

ஒரு பெரிய அதிகாரி தொழில் சம்பந்தமாக மையம் வந்தார். அவர் வேலையை அவர் செய்யும்பொழுது மனதில் அமைதி குடி கொண்டது. பலரும் தியானத்திலிருப்பதைக் கண்டார். அவருக்கு ஒரு பிரச்சினை. தாயாருக்குக் கண்ணில் ஆப்பரேஷன் தேதி குறித்தாயிற்று. B.P., Sugar நார்மலானால்தான் ஆப்பரேஷன் செய்ய முடியும். அவை நார்மலாக நடைமுறை வைத்தியம் முடித்தாயிற்று. பணம் பிரச்சினையில்லை. அவை நார்மலாக மறுக்கின்றன. தேதியை ஒத்திப் போட வேண்டும். ஒத்திப் போட்டால் என்ன நடக்கும்? தாயாருக்கு வயது 75. அவருக்கு வழி தெரியாத நேரம். இந்த மதர் கிட்டேயாவது சொல்லிப் பார்ப்போம் என அவருக்குத் தோன்றவில்லை. தாயாரைப் போய்ப் பார்த்தார்.

டாக்டர் B.P., Sugar நார்மல், ஆப்பரேஷன் செய்யலாம்,

என்றார்.

ஆப்பரேஷன் முடிந்தது. அவருக்குச் சந்தோஷம். மீண்டும் மையம், பக்தனாக வந்தார். “நான் திகைத்துப் போன நேரம் இங்கு வந்தேன். என் பிரச்சினை பிரார்த்திக்காமல் தீர்ந்தது” என்றார். அனுபவிக்க வேண்டிய கர்மத்தினின்று அன்னை தரும் விடுதலை. அவர் அமைதி மூலம் வருகின்றது.

★ ★ ★